www.tamilarangam.net

# இராஜபக்சே ஒரு போர்க்குற்றவாளி

## டப்ளின் (அயர்லாந்து)
## தீர்ப்பாயத் தீர்ப்பு முழு விவரம்

*தமிழில்*

**பூங்குழலி**

புதுமலர்
ஈரோடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | இராஜபக்சே ஒரு போர்க்குற்றவாளி<br>( டப்ளின் தீர்ப்பு ) |
| ஆசிரியர் | : | பூங்குழலி ( தமிழில் ) |
| முதல் பதிப்பு | : | சூலை 2010<br>திருவள்ளுவர் ஆண்டு 2041 |
| வெளியீடு | : | புதுமலர் பதிப்பகம்<br>176 வைகை வீதி<br>வீரப்பன் சத்திரம் ( அஞ்சல் )<br>ஈரோடு 638 004<br>அலைபேசி : 94433 07681 |
| மின்னஞ்சல் | : | newflower_kurinji@yahoo.co.in |
| ஒளியச்சு/<br>அட்டை வடிவமைப்பு | : | தலித் முரசு |
| அச்சாக்கம் | : | ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ்<br>சென்னை 600 083. |
| பக்கங்கள் | : | 64 |
| விலை | : | ரூ.30/ |
| நூல் கிடைக்குமிடம் | : | புதுமலர் பதிப்பகம் ஈரோடு<br>( மற்றும் )<br>தமிழோசை பதிப்பகம்<br>1050 சத்தி சாலை<br>காந்திபுரம்<br>கோவை 641 012<br>அலைபேசி : 97884 59063 |


## நுழைவாயில்

**கண.குறிஞ்சி**

அண்மையில் தமிழீழ ஆதரவுப் போராட்டத்தில் மிகுந்த அக்கறையோடும் அர்ப்பணிப்போடும் ஈடுபட்ட பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த சில முன்னணித் தோழர்களிடம் டப்ளின் தீர்ப்பாயத் தீர்ப்பு பற்றி உரையாடிக் கொண்டிருந்தபொழுது, அது பற்றி அவர்கள் எதுவுமே அறியாமல் இருந்தது எனக்கு மிகப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. ஈழப் போராட்டம் குறித்தும், போராளிகள் குறித்தும் பல்வேறு வகையான கருத்தோட்டங்கள் தமிழ்ச் சமூகத்தில் நிலவுகின்றன. ஆனால் ஈழப் போராட்டம் குறித்து மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களும்கூட அண்மைக்கால வரலாற்றில் ஆசியக் கண்டத்தில் மிகப்பெரும் உயிர்ப்பலி நேர்ந்ததற்கு சிங்கள இனவெறியன் இராஜபக்சேதான் காரணம் என்பதில் மாறுபாடு கொள்வதில்லை. அத்தகைய கொடியவனுக்குப் பாடம் புகட்டும் முறையில், அயர்லாந்து தலைநகர் டப்ளினில் கூடிய நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் பத்து நீதிபதிகள் தந்த தீர்ப்பு நெற்றியடியாக அமைந்தது.

1. **இராஜபக்சே, ஒரு போர்க்குற்றவாளி**
2. **இராஜபக்சே, மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை இழைத்தது உண்மை** - எனும் இரண்டு திருப்புமுனைத் தீர்ப்புகளை அமெரிக்கா, அர்ஜென்டினா, பெல்ஜியம், அயர்லாந்து, இத்தாலி, எகிப்து, இந்தியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகள் பல்வேறு ஆதாரங்களின் அடிப்படையில் வழங்கி உள்ளனர்.

சர்வதேச அளவில் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கிய **நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்** (Permanent People's Tribunal) மனித உரிமைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் ஆராய்ந்து தீர்ப்புக்களை வழங்கக்கூடிய ஒரு சர்வதேச அமைப்பாகும். இத்தாலியில் 1979ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத் தீர்ப்பாயம், சர்வதேச மக்கள் உரிமைப் பிரகடனத்தால் (Universal Declaration of Human Rights UDHR) உந்துதல் பெற்று, திபெத்– மேற்கு சகாரா– அர்ஜென்டீனா– எரித்திரியா– பிலிப்பைன்ஸ்– எல்சால்வடார்–ஆப்கானிஸ்தான்–கிழக்குத்திமோர்– கவுதமாலா– அர்மீனியா – நிகரகுவா போன்ற நாடுகளில் நடைபெற்ற பல்வேறு உரிமை மீறல்களைத் தனது ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு தீர்ப்புகளை வழங்கியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இத்தீர்ப்புக்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் இதற்கு இல்லாவிட்டாலும், அவை மிகுந்த நம்பகத்தன்மை உடையவையாக உலகெங்கும் மதிக்கப்படுகின்றன; இத்தீர்ப்புகள் முக்கியமான பன்னாட்டு அமைப்புகளுக்கு அனுப்பப்படுகின்றன; இத்தீர்ப்புகளில் பல ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைக் குழுமத்தினால் விவாதிக்கப்படுகின்றன; அதன் விளைவாகப் பல்வேறு அரசியல் மாற்றங்களுக்கு வித்திடுகின்றன. எரித்திரியாவின் விடுதலைப் போராட்டம், பிலிப்பைன்ஸ் நாட்டின் சர்வாதிகாரி மார்கோசிற்கு எதிரான கண்டனம் போன்றவை இத்தீர்ப்பாயத்தின் முன்னால் வந்த சில அண்மைக்கால நிகழ்வுகளாகும். சிக்கலின் வேர்களைக் கண்டறிவதோடு நேர்மையான தீர்ப்புக்களை வழங்குவது; தனி நபர்கள் அல்லது குழுவினரது பொறுப்புக்களை உணர்த்துவது மட்டுமல்லாமல், சிக்கலுக்கு உள்ளாகியுள்ள நாடுகளின் கட்டமைப்புக் காரணங் களையும் சுட்டிக் காட்டுவது இத்தீர்ப்பாயத்தின் முக்கியமானதோர் சிறப்பாகும். சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court) உருவாக்கப்பட்ட பிறகு, இத்தீர்ப்பாயம் தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

சிறீலங்காவில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களை அயர்லாந்து நாட்டின் தலைநகர் டப்ளினில் ***2010 ஜனவரி 14 /15/16*** ஆகிய நாள்களில் இத்தீர்ப்பாயம் விவாதிக்க ஏற்பாடு செய்தது **சிறீலங்காவில் அமைதிக்கான ஐரிஷ் கருத்து மன்றம்** (Irish Forum for Peace in Sri Lanka)எனும் அமைப்பாகும். இது 2007ஆம் ஆண்டு மே மாதத்தில் தொடங்கப் பட்டது. மனித உரிமை மற்றும் அமைதிக்காகப் பரப்புரை ஆற்றிவரும் மனித உரிமைக் குழுவினர், கலைஞர்கள் மற்றும் அயர்லாந்திலிருக்கும் கல்வியாளர்கள் ஆகியோர் சிறீலங்காவில் மனித உரிமைகள், சனநாயகம் குறித்துப் பேச்சு வார்த்தைக்கு உதவும் பொருட்டு இவ்வமைப்பை உருவாக்கினர். இராஜபக்சேவுக்கு எதிரான உண்மையான தீர்ப்பு உருவாவதற்கு இவ்வமைப்பின் நேர்மையான முயற்சிகள் உதவி இருக்கின்றன.

உலக வரலாற்றில் இராஜபக்சேவுக்கு முன்னாலும், போர்க் குற்றங்களுக்காகவும் மனித குலத்திற்கெதிரான குற்றங்களை இழைத்ததற்காகவும் பலரும் தண்டிக்கப்பட்டுள்ளார்கள். ஜெர்மனியில் இட்லரின் நாஜிப்படைனரின் மாபெரும் அணிவகுப்புகள் நடைபெற்ற **நூரம்பர்க்** எனுமிடத்தில், 21 பேருக்குப் பன்னாட்டு இராணுவத் தீர்ப்பாயம் தூக்கு தண்டனை, ஆயுள் தண்டனை, 10ஆண்டு / 15 ஆண்டு / 20 ஆண்டு சிறைத்தண்டனை எனக் கடுமையான தண்டனைகளை வழங்கியது (1945-1949). அதைத் தொடர்ந்து



போஸ்னியா, டார்பர் (சூடான்) ஆகிய நாடுகளில் நடைபெற்ற போர்க்குற்றங்களுக்காகவும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்காகவும் தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. போஸ்னியா, காங்கோ ஜனநாயகக் குடியரசு, சூடான் (டார்பர்) ஆகிய நாடுகளுக்கு எதிராகப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்புக்களை வழங்கியது. அதே போல் சிறீலங்காவில் தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களுக்காகப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் விசாரணை நடத்த முடியாத சூழல் நிலவுகிறது. ஏனெனில், நாட்டு அரசுகள்தான் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியும். அல்லது ஐக்கிய நாடுகள் அவையின் பாதுகாப்புக் குழு வழக்குத் தொடுக்கலாம். ஆனால் ஈழச்சிக்கலில் இந்த இரண்டுமே சாத்தியமில்லாமல் போய்விட்டது.

2009 மே மாதத்தில் ஐக்கிய நாடுகள் அவையின் பாதுகாப்புக் குழுவில் சிறீலங்காவில் மனித உரிமைகள் குறித்து நிறைவேற்றப் பட்ட தீர்மானம் பற்றி அடிக்கடி பேசப்படுகிறது. சுவிட்சர்லாந்து நாடு முன் மொழிந்த தீர்மானத்தில், சிறீலங்காவில் தமிழ் மக்கள் மீது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து சிறீலங்கா அரசே விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று மட்டுமே கோரப் பட்டிருந்தது; சர்வதேச விசாரணை கோரப்படவில்லை. ஆனால் அதுவுங்கூட ஏற்கப்படவில்லை என்பதுதான் மிகப்பெரும் அவலம்.

இறுதியாக ஐக்கிய நாடுகள் அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் தமிழாக்கத்தைக் கீழே தருகிறேன்–

***ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைக் குழுவின் பதினொன் றாம் சிறப்பு அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ( 27 மே 2009)***

சிறீலங்காவின் இறையாண்மை, ஒருமைப்பாடு மற்றும் அதன் சுதந்திரத்தின் மீதான மதிப்பையும், அது தனது குடிமக்களைப் பாதுகாக்கும் உயர் உரிமையையும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போரிடும் தன்மையையும் **மனித உரிமைக்குழு** ( Human Rights Council ) மீண்டும் உறுதிப் படுத்துகிறது. பகைமையுணர்வு முடிவுக்கு வந்ததையும், குடிமக்களின் விருப்பத்திற்கு மாறாக தமிழீழ விடுதலைப்புலிகளால் பிணையாகப் பிடித்து வைக்கப் பட்டிருந்த பல்லாயிரக்கணக்கான குடிமக்களை விடுதலை செய்த சிறீலங்கா அரசையும் மனித உரிமைக்குழு வரவேற்கிறது. மேலும் சிறீலங்காவிலுள்ள அனைவரது பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் கொடுத்த அரசின் முயற்சிகளையும், அந்நாட்டில் நிலையான சமாதானத்தைக் கொண்டு வந்ததையும் மனித உரிமைக் குழு வரவேற்கிறது.

www.tamilarangam.net

இலங்கைச் சிக்கலுக்கு இராணுவத் தீர்வுதான் இறுதியானது எனத் தான் கருதவில்லையென, சிறீலங்காவின் குடியரசுத்தலைவர் அண்மையில் கொடுத்த மறுவாக்குறுதியை மனித உரிமைக் குழு வரவேற்கிறது. மேலும் சிறீலங்காவில் நிலையான அமைதி யையும் சமாதானத்தையும் கொண்டு வருவதற்குப் பதிமூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி ஓர் அரசியல் தீர்வு காண முடியும் எனும் அவரின் உத்தரவாதத்தையும் மனித உரிமைக் குழு வரவேற் கிறது. உள் நாட்டிற்குள்ளேயே இடம் பெயர்ந்தவர்கள் உள்ளிட்ட போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி, மறு குடியேற்றம் பெற உதவுவதும், நாட்டின் பொருளாதாரம் மற்றும் அடிப்படைக் கட்டுமானத்தை மீண்டும் கட்டி எழுப்புவதும் பகைமை முடிவுக்கு வந்த இக்காலகட்டத்தில் மனித உரிமைச் செயற்பாடுகளில் முதன்மையானது என இக்குழு வலியுறுத்துகிறது. பெருந்தொகை யாகவுள்ள உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களை ஆறுமாதத்தில் பாதுகாப்பாகக் குடியமர்த்தும் திட்டத்தை சிறீலங்கா அரசு அறிவித்ததையும் மனித உரிமைக் குழு வரவேற்கிறது.

சிறீலங்காவின் கிழக்குப் பகுதியில் போர் முடிவுற்றதும் முன்னாள் குழந்தைப் போர் வீரர்களை மறுசீரமைப்புச் செய்து அவர்களை வெற்றிகரமாக மீண்டும் ஒருங்கிணைத்ததை மனித உரிமைக்குழு வரவேற்கிறது.

சிறீலங்காவிலுள்ள மனித உரிமைச் சூழலையும், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் முறையாகவும் ஒளிவு மறை வின்றியும் தொடர்ந்து எடுத்துரைத்த சிறீலங்கா அரசின் செயலை மனித உரிமைக் குழு அங்கீகரிக்கிறது.

1. உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் அவசரத் தேவை களுக் கான நடவடிக்கைகளை எடுத்துவரும் சிறீலங்கா அரசை இக்குழு பாராட்டுகிறது.

2. அனைத்து மனித உரிமைகளையும் மேம்படுத்துவதிலும் பாது காப்பதிலும் தொடர்ந்து அர்ப்பணிப்போடிருக்கும் சிறீலங்காவை இக்குழு வரவேற்கிறது. மேலும் மனித உரிமைக் கடமைகளையும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் கூறுகளையும் தொடர்ந்து உயர்த்திப் பிடிக்குமாறு சிறீலங்காவை இக்குழு ஊக்குவிக்கிறது.

3. உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்குத் தேவையான அடிப்படை மனித நேய உதவி, குறிப்பாக பாதுகாப்பான குடிநீர் - சுகாதாரம்-உணவு-மருத்துவம் மற்றும் உடல்நலப் பாதுகாப்பு ஆகியவற்றை ஐக்கிய நாடு அமைப்புகளின் ஒத்துழைப்போடு நிறைவேற்ற சிறீலங்காவை இக்குழு தூண்டுகிறது.



4. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களை ஆறுமாதத்திற்குள் பாதுகாப்பாகவும் முழுமையாகவும் மறு குடியமர்த்தும் திட்டம் பற்றி அறிவித்ததற்காகவும், தேசிய, மத மற்றும் மொழிச் சிறுபான்மையினர் ஆகிய பிரிவினருக்கு உரிய மரியாதை கொடுத்து இம்முயற்சிகளில் ஈடுபடச் சீறீலங்காவை உற்சாகப்படுத்துமாறும், இக்குழு வேண்டுகிறது

5. கடந்த காலப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு - குறிப்பாக உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கு – அவர்களது அவசரத் தேவைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் சர்வதேச மனிதநேய முகவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யும் சீறீலங்கா அரசின் அர்ப்பணிப்பை இக்குழு அங்கீகரிக்கிறது. மேலும் இது குறித்துப் பொருத்தமான பணிகளை மேற்கொள்ளுமாறு சிறீ லங்காவை இக்குழு தூண்டுகிறது.

6. சிறீலங்காவில் நடைபெற்ற போரில், அரசு அல்லாத ஆயுதப் படையினரால் பணியமர்த்தப்பட்ட முன்னாள் குழந்தைப் போர் வீரர்களின் ஆயுதங்களைக் களைவதற்கும், அவர்களைக் கலைப் பதற்கும், மறு குடியேற்றத்திற்கும் உடல்/ உள மாற்றத்திற்கும், சமூகத்தில் மீண்டும் அவர்களைப் பிணைப்பதற்கும் குறிப்பாகப் பெண்களின் தேவைகள் மற்றும் திறமைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு அவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும், சிறீலங்கா அரசு ஐக்கிய நாடு அமைப்புகளின் ஒத்துழைப்பு மூலம் சிறீலங்கா அரசு எடுத்து வரும் முயற்சியைத் தொடருமாறு இக்குழு ஊக்குவிக்கிறது.

7. மனித உரிமையை முழுமையாக அனுபவிப்பதில் சிறு பான்மை இனத்தவர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டாமல் உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை சிறீலங்கா அரசு தொடர வேண்டும் என இக்குழு வலியுறுத்துகிறது.

8. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதநேய உதவி அளிப்பதில், ஐக்கிய நாடுகள் அவையின் முகவர்கள் மற்றும் பிற மனித நேய அமைப்புகளுக்கு சிறீலங்கா அரசு தொடர்ந்து ஒத்துழைப்பு நல்குமாறு வலியுறுத்துகிறது.

9. ஐக்கிய நாடுகள் அவையின் மனித நேயச் செயல்பாடுகளின் செயலாளர் நாயகம் அவர்களும், செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி அவர்களும், உள் நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் மனித உரிமை குறித்தறிய சிறீலங்காவிற்கு அண்மையில் வருகை புரிந்ததை இக் குழு வரவேற்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதநேய உதவி வசதியும், ஒருங்கிணைப்பும் வழங்கித் தொடர்ந்து ஒத்துழைக்கு மாறு இக்குழு வேண்டுகிறது.

www.tamilarangam.net

*10.* சிறீலங்கா அதிபரின் அழைப்பிற்கிணங்க சிறீலங்காவிற்கு வருகை புரிந்த செயலாளர் நாயகம், அப்பயண இறுதியில் வெளியிட்ட கூட்டறிக்கையையும் அதன் புரிந்துணர்வையும் இக்குழு வரவேற்கிறது.

*11.* சிறீலங்காவில் நீடித்த அமைதி, வளர்ச்சி மற்றும் அரசியல் தீர்வு காணவும், சிறீலங்காவில் வாழும் அனைத்து இன மற்றும் மதக் குழுக்களின் உரிமைகளுக்கு மதிப்புக் கொடுத்துப் புரிந்துணர்வின் அடிப்படையில் விரிவான பேச்சுவார்த்தையைத் தொடங்கவிருக்கும் சிறீலங்கா அரசின் உறுதிப்பாட்டை இக்குழு வரவேற்கிறது. அக்கறையும் கரிசனமும் கொண்ட அனைவரையும் இதில் தீவிரமாகப் பங்கேற்குமாறும் இக்குழு அழைப்பு விடுக்கிறது.

*12.* சிறீலங்காவின் வறுமை மற்றும் வளர்ச்சியற்ற தன்மையை எதிர்த்துப் போராடவும், மறுகட்டமைப்பு முயற்சிகளுக்குத் தேவையான நிதி உதவி, வளர்ச்சிக்கான உதவி ஆகியவற்றை அதிகரித்து, சிறீலங்கா அரசோடு ஒத்துழைக்குமாறு சர்வதேசச் சமூகத்தை இக்குழு வலியுறுத்துகிறது. அதேபோல் அந்நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள் உள்ளிட்ட அனைத்து மனித உரிமைகளையும், பாதுகாக்கவும் மேம்படுத்தவும் தொடர்ந்து உதவுமாறு இக்குழு வேண்டுகிறது.

– இதுதான் 2009 மே 26-27 நாட்களில் ஐ.நா.வின் மனித உரிமைக் குழுவின் பதினொன்றாம் சிறப்புக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

( ஆதாரம் :- Report of the Human Rights Council on its Eleventh Special Session )

உலகிலுள்ள பல்வேறு நாடுகள் இராஜபக்சேவுக்கு ஆதரவாக அணிதிரண்டதை ஐ.நா.வின் இத்தீர்மானம் வெட்ட வெளிச்சமாக்குகிறது. ஆனால் இதில் ஒருமனதாக ஏற்கப்பட்ட எந்தத் திட்டத்தையும் இதுவரை இராஜபக்சே அரசு முழுமையாகச் செயல்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அங்கோலா, அசர்பெய்சான், பகரைன், பங்களாதேசம், பொலிவியா, பிரேசில், பர்கினா பேசோ, கேமரூன், சீனா, கியூபா, டிஜி பௌட்டி, எகிப்து, கானா, இந்தியா, இந்தோனேசியா, ஜோர்டான், மடகாஸ்கர், மலேசியா, நிகரகுவா, நைஜீரியா, பாகிஸ்தான், பிலிப்பைன்சு, கட்டார், இரசியக் கூட்டமைப்பு, சௌதி அரேபியா, செனகல், தென் ஆப்பிரிக்கா, உருகுவே, ஜாம் பியா ஆகிய 24 நாடுகள் இத்தீர்மானத்தை ஆதரித்து-சிறீலங்காவிற்குச் சாதகமாக-ஓட்டளித்தன.



போஸ்னியா, ஹெர்சகோவினா, கனடா, சிலி, பிரான்சு, ஜெர்மனி, மெக்சிகோ, நெதர்லாந்து, ஸ்லோவாகியா, ஸ்லோவேனியா, ஸ்விட்சர்லாந்து, பிரிட்டனின் ஒன்றுபட்ட அரசு(UK) மற்றும் வடக்கு அயர் லாந்து ஆகிய 12 நாடுகள் இத் தீர்மானத்தை எதிர்த்து - சிறீலங்கா விற்குப் பாதகமாக - ஓட்டளித்தன.

அர்ஜென்டீனா, கேபான், ஜப்பான், மொரீசியஸ், கொரியக் குடியரசு, உக்ரைன் ஆகிய ஆறு நாடுகள் ஓட்டளிக்கவில்லை. இந்தப்பின்னணியில்தான் டப்ளின் நிரந்தர மக்கள் தீர்ப்பாயத் தீர்ப்பின் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். ஐ.நா.வின் மனித உரிமைக்குழுவின் ஆதரவைப் பெற்ற இராஜபக்சே, டப்ளினில் போர்க்குற்றவாளியாகப் பிரகடனப்படுத்தப் பட்டது நீதிக்குக் கிடைத்த முதல் வெற்றியாகும்.

மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை இராஜபக்சே செய்துள்ளான் என்பது ஏராளமான தரவுகளோடு மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட மனித குலப் பகைவன், தான் செய்த குற்றங்களிலிருந்து தப்பிவிட ஒருக்காலும் அனுமதிக்க முடியாது. இராஜபக்சே தப்பி விட்டால், அது மனித குலத்திற்கே மிகப்பெரும் அவமானமாகும்.

இன்றைய புவிசார் அரசியல் சூழலில், தமிழ் மக்கள் மீது அநியாயமாக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நியாயம் கேட்க, அரசாங்கங்களை நம்பிப் பயனில்லை. அவை தங்களது எதிர்கால இலாபத்தை முன்வைத்தே சர்வதேச நிலைபாடுகளை எடுக்கின்றன. ஆகவே உலகெங்குமுள்ள புரட்சியாளர்கள், சனநாயக ஆர்வலர்கள், மனித உரிமையாளர்கள், தேசிய இன விடுதலைப் போராளிகள், மனச்சாட்சியுள்ள சிவில் சமூகம் ஆகியோரது ஆதரவைத் திரட்டுவதுதான் இன்றைய நிலையில் ஏற்புடையதாக இருக்கும். “மூலதனம் உலகமயமாவதால், புரட்சியும் உலகமயமாக வேண்டியது கட்டாயம்” எனப் **புரட்சியாளர் துணைத் தளபதி மார்கோஸ்** இதைத்தான் குறிப்பிடுகிறார்.

ஏற்கெனவே சனநாயக சக்திகள்தான், சிங்கள இனவெறி அரசு மற்றும் இராஜபக்சேவின் பொய் முகத்தை அம்பலப்படுத்தியுள்ளன. அவ்வகையில் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் (முன்னாள் ) அகில இந்தியத் தலைவர் திரு. **கண்ணபிரான்**, தமிழகத் தலைவர் வழக்குரைஞர் திரு. **சுரேஷ்**, பெங்களூர் வாழ் தமிழர் திரு. **பால் நியூமென்** ஆகியோர் சிறீலங்காவில் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்களைச் சட்ட வடிவில் எதிர்கொள்ளத் தேவையான முயற்சிகளைப் பாராட்டத்தக்க முறையில் முன் னெடுத்தனர்.

www.tamilarangam.net

அதேபோல் ஈழத்தமிழ் மக்கள் மீது ஏவப்பட்ட கடும் ஒடுக்கு முறைகளை மக்களிடம் அம்பலப்படுத்துவதிலும் மக்களை அணி திரட்டுவதிலும் பல்வேறு அரசியல் கட்சிகளும், தமிழீழ ஆதரவு அமைப்புகளும், தமிழ்த்தேசிய இயக்கங்களும், புரட்சிகர மற்றும் தலித்திய இயக்கங்களும், பரந்துபட்ட சனநாயக சக்திகளும் மிகப் பெரும் பங்காற்றியுள்ளன. ‘செய்திகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பு உடையவர்களுக்கு, அது சார்ந்து செயலாற்ற வேண்டிய கடமையும் இருக்கிறது’ என்றார் ஐன்ஸ்டீன். எனவே **டப்ளின் தீர்ப்பாயத் தீர்ப்பு பற்றி அறிந்து கொள்வதோடு, நாடு முழுவதும் பட்டி தொட்டிகளெங்கும்-அதனைக் கொண்டு செல்வதும் இயக்க மாக்குவதும் நமது தலையாய கடமையாகும்.** தமிழ் மக்களின் ஜென்மப் பகைவன் இராஜபக்சேவுக்கு உரிய தண்டனை பெற்றுத் தரும்வரை சனநாயக சக்திகளுக்கு ஓய்வு என்பது இல்லை.

“ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும், ஜெர்மனியின் குற்றத்தை வரலாற்றிலிருந்து அழிக்க முடியாது” என போலந்திற்கான நாஜி ஆளுநர் ஹேன்ஸ் பிராங்க் நூரம்பர்க் விசாரணையில் ஒப்புதல் வாக்குமூலமாகக் குறிப்பிட்டான். அதுபோல ஈழ மண்ணில் சிந்தப்பட்ட தமிழ் இரத்தம், அதிகாரத்தின் மமதையை அம்பலப் படுத்துவதோடு, விடுதலை வேட்கையின் வீரியத்தையும், வீழ்ந்து விடாத வீரத்தையும் உலகம் முழுவதும் உரத்துச் சொல்லிக் கொண்டேயிருக்கும்.

★★★

டப்ளின் தீர்ப்பாயத் தீர்ப்பு தலித் முரசு பிப்ரவரி 2010 இதழில் திரு. பூங்குழலி அவர்களின் தமிழ் மொழியாக்கத்தில் முழுமையாக வெளியிடப்பட்டது. அதைப் புதுமலர் பதிப்பகம் சார்பாக நூலாக வெளிக் கொணரும் எமது ஆர்வத்தைத் திரு. **புனித பாண்டியன்** அவர்களிடம் தெரிவித்தபொழுது, சிறிதும் தயங்காமல்உடனே அதற்கு அவர் இசைவு அளித்தார். அத்தோடு நில்லாமல், இந் நூலிற்கான அட்டையை வடிவமைக்கும் பணியையும் அவரே எடுத்துக் கொண்டு, மிகச்சிறப்பாக அதை நிறைவேற்றித் தந்துள்ளார். திரு. புனித பாண்டியன் அவர் களது தோழமை உணர்வுக்கு எப் பொழுதும் எமது நன்றி உரித்தாகும். அதே போல் சகோதரி திரு. **பூங்குழலி** அவர்களுக்கும் எமது நன்றி.

சூலை 2010 — **புதுமலர்**


ஈரோடு



## உள்ளடக்கம்


- நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்: ஓர் அறிமுகம் 13
- குற்றச்சாட்டுகள் 16
- போர் நிறுத்தமும் அமைதிப் பேச்சுவார்த்தைகளின் முறிவும் 20
- போரின் இறுதி வாரங்களில் நடைபெற்ற அட்டூழியங்கள் 24
- ஆவணங்களின் திறனாய்வு 30
- பரிந்துரைகள் 39
- இறுதிக்குறிப்புகள் 43
- நிகழ்ச்சி நிரல் 45
- அநீதியின் வரலாற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் 49
- பன்னாட்டுச் சட்டங்களின் படி ஈழத்தமிழர்களின் உரிமைகள் 54

www.tamilarangam.net




# நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் :

## ஓர் அறிமுகம்

''அமைதிப் பேச்சு வார்த்தைகள் முறிந்து போன பிறகு நடைபெற்ற இறுதிக் கட்டப் போர், குறிப்பாக இறுதி மாதங்கள்'' பற்றி விசாரிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்ட ஒரு விசாரணையை – 'நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்' மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான கோரிக்கையை முன்வைத்த ஆவணங்கள், நவம்பர் 19, 2009 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டன.

நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் – எந்த அரசதிகாரத்தையும் சார்ந்திராத ஓர் உலகளாவிய கருத்துத் தீர்ப்பாயம். மனித உரிமை மீறல்கள் குறித்தும் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவது குறித்தும் அது விசாரணைகளை மேற்கொள்கிறது.

'லெலியோ பாசோ' என்ற மக்களின் உரிமைகள் மற்றும் விடுதலைக்கான உலகளாவிய அமைப்பினால் ஆதரித்து ஊக்கப்படுத்தப்படும் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம், இத்தாலியில் உள்ள பொலோக்னாவில் சூன் 1979 அன்று 31 நாடுகளைச் சேர்ந்த பல சட்ட வல்லுநர்கள், எழுத்தாளர்கள் மற்றும் நோபல் பரிசு பெற்ற 5 பேர் உட்பட, பிற பண்பாட்டு மற்றும் சமூகத் தலைவர்களால் உருவாக்கப்பட்டது.

வியட்நாம் (1966 – 67) மற்றும் லத்தின் அமெரிக்காவின் சர்வாதிகாரங்கள் (1974 – 76) மீதான ரஸ்சல் தீர்ப்பாயத்தின் மூலம் பெற்ற வரலாற்று அனுபவங்களைத் தனது அடிப்படையாக நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் கொண்டுள்ளது. நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் மேற்கொள்ளும் முடிவுகளின் முக்கியத்துவமும் பலமும் – அதன் முன் விசாரணைக்கு வரக்கூடிய வழக்குகளின் தார்மீக பலத்தையும், அவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்வைக்கும் வாதங்களின் உண்மைத் தன்மையையும், தீர்ப்பாயத்தின் உறுப்பினர்களின் நேர்மை மற்றும் தீர்மானிக்கும் திறன் ஆகியவற்றையும் பொருத்தது.

தீர்ப்பாயத்தின் முன் வரும் புகார்கள் பாதிக்கப்பட்டவர்களாலோ, அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுக்கள் அல்லது தனி நபர்களாலோ அளிக்கப்படுகிறது. நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் அதில் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் ஒன்றாக அழைத்து, குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் தரப்பு வாதத்தை முன் வைக்கப் போதுமான வாய்ப்பினை வழங்குகிறது. விசாரணைக் குழு ஒவ்வொரு வழக்கிற்கும் பொருத்தமான நபர்களாகவும், தங்கள் நேர்மைக்கும் திறனுக்கும் அறியப்பட்டவர்களாகவும் உள்ளவர்களை கொண்டதாக அமைக்கப்படுகிறது.

சூன் 1979 முதல் இன்று வரை, ஏறத்தாழ 40 விசாரணைகளை நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் மேற்கொண்டுள்ளது. அவற்றின் விவரங்களும் தீர்ப்புகளும் கீழ்க்காணும் தளத்தில் கிடைக்கப் பெறும் : http://www.internazionaleleliobasso.it

இலங்கை குறித்த இந்த விசாரணையை மேற்கொள்ள, சூன் 2009 லேயே பல்வேறு தரப்பினையும் சேர்ந்த பல தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் செயலரை அணுகினர். அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு உலகெங்கிலும் பரவலாக தலைப்புச் செய்திகளாக ஆகிப் போகும் வகையில் – பல மாதங்கள் நடந்த இரத்த வெறி கொண்ட படுகொலைகளுக்குப் பிறகு, இலங்கை அரசு போர் முடிந்ததாக அறிவித்தது. நிலைமையின் அவசரம் புரிந்து கொள்ளப்பட்டது. கூடுதலாக, தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதை உலக ஊடகங்களின் கவனத்திலிருந்து மறைப்பதற்குத் துணை போன உலகளாவிய நிறுவனங்களின் அலட்சியப் போக்கிற்கு மாற்றாக, நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் திறன் கவனத்தில் கொள்ளப்பட்டது.

''அமைதிப் பேச்சு வார்த்தைகள் முறிந்து போன பிறகு நடைபெற்ற இறுதிக் கட்டப் போர், குறிப்பாக இறுதி மாதங்கள்'' பற்றி விசாரிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்ட ஒரு விசாரணையை – நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான கோரிக்கையை முன்வைத்த ஆவணங்கள், நவம்பர் 19, 2009 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டன.



விசாரணை நடைமுறைகள் குறித்த விளக்கக் குறிப்பும், நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தினால் டப்ளினில் நடத்தப்பட இருக்கும் விசாரணையில் பங்கேற்கக் கோரும் அழைப்புக் கடிதமும் – லண்டனில் உள்ள இலங்கை அரசின் பிரதிநிதி மதிப்பிற்குரிய நீதியரசர் நிஹால் ஜெயசிங்கேவிடம் டிசம்பர் 1, 2009 அன்று அளிக்கப்பட்டன.

நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் சட்ட திட்டங்களின்படியும், அதன் அறிவிப்பில் உள்ளபடியும், விசாரணையில் தங்கள் தரப்பு வாதத்தை முன்வைப்பதற்காக வழங்கப்பட்ட வாய்ப்பு குறித்தும் – நேர்மறையான பதில் எதுவும் இல்லாத நிலையில், பொது விசாரணையில் இலங்கை அரசின் பார்வையில் கருத்துக்களை முன்வைக்க ஒருவரை நிரந்தர மக்கள் தீர்ப்பாயமே நியமித்தது.

நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் விசாரணை, டிரினிடி கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டது. பாதுகாப்பு காரணங்களால் போரின் இறுதி மாதங்கள் குறித்த நேரடி சாட்சிகளின் விரிவான வாக்குமூலங்களை, நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் உறுப்பினர்கள் மூடிய அறையில் விசாரித்தனர்.

இந்த விசாரணையை மேற்கொள்வதற்காக தமிழ் அமைப்புகளிடமோ, இதில் தொடர்புடைய அரசுகளிடமோ எவ்விதப் பொருளுதவியும் பெறப்படவில்லை எனவும், பல தொண்டு நிறுவனங்களின் தன்னார்வப் பங்களிப்பின் மூலமாகவே தீர்ப்பாயத்தின் கட்டமைப்பு மற்றும் பொருளாதாரத் தேவைகள் நிறைவேற்றப்பட்டன என்றும் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் உறுதி கூறுகிறது.

தீர்ப்பாயத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட எழுத்து மற்றும் ஒளிப்பட ஆவணங்கள், நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

●

www.tamilarangam.net

# குற்றச்சாட்டுகள்

'இலங்கையில் அமைதிக்கான அய்ரிஷ் கருத்து மன்றம்' 19.11.2009 அன்று ஒரு மக்கள் தீர்ப்பாயத்தை நடத்தக் கோரியது. சூலை 2006இல் போர் தொடங்கிய நாள் முதல் ஏப்ரல் 2009 வரை, அய்க்கிய நாடுகள் அவையின் உள் ஆவணங்களின்படி, வான் வழித் தாக்குதல் மற்றும் கனரக ஆயுதங்களின் பயன்பாடு காரணமாக, ஒரு நாளைக்கு 116 பேர் கொல்லப்பட்டதாக அந்த அய்ரிஷ் குழு கூறியது. இறுதி சில வாரங்களில் மட்டும் 20,000 தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

போர் குறித்த ஜெனிவா ஒப்பந்தங்களை இலங்கை பாதுகாப்புப் படையினர் மீறியதாகவும், குறிப்பாக போரின் இறுதி அய்ந்து மாதங்களான சனவரி முதல் மே 2009 வரையிலான காலகட்டத்தில் கொடூரமான போர்க் குற்றங்களையும், மானுடத்திற்கு எதிரான குற்றங்களையும் அவர்கள் புரிந்ததாகவும் பல குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன.

மக்களின் வாழ்விடங்கள், மருத்துவமனைகள், அரசு அறிவித்த 'பாதுகாப்பு வலையங்கள்', பாதுகாப்புப் படையினர் அறிவித்த 'தாக்குதல்கள் அற்ற வலையங்கள்' ஆகியவற்றின் மீது பாதுகாப்புப் படையினர் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதல்களும், அவற்றின் மூலம் பல மக்களும் மருத்துவர்களும் தொண்டு ஊழியர்களும் கொல்லப்பட்டதும் இந்த குற்றச்சாட்டுகளில் அடங்கும். போர்ப் பகுதிகளில் மக்களின் அன்றாட வாழ்வியல் தேவைகளான உணவு, நீர் மற்றும் மருத்துவ வசதிகள் வழங்கப்படாததும் இப்புகார்களில் அடங்கும். இவற்றைத் தவிர, மானுடத்திற்கு எதிரான கொடூரக் குற்றங்களும் அதில் அடங்கும்.



போர் முடியும் முன்பே அய்.நா. அவையின் நிறுவனங்கள், நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மக்கள் மீது இலங்கை அரசின் ஆயுதப் படையினர் நடத்தும் தாக்குதல்கள், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் முன்பு இருந்த பகுதிகளில் வாழும் மக்களுக்கு எல்லாவித உதவிகளும் மறுக்கப்பட்டமை ஆகியவை குறித்து இலங்கை அரசிடம் தங்கள் கவலையை வெளிப்படுத்தின. ஆனால் இலங்கை பாதுகாப்புப் படையினர் இந்த எச்சரிக்கைகளை எல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு, தங்கள் போக்கில் கொடூரக் குற்றங்களைத் தொடர்ந்தனர்.

போர் முடிந்த உடனடி மாதங்களில், அனைவரின் கவனமும் வன்னிப்பகுதி தடுப்பு முகாம்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 2 லட்சத்து 80 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் மீது திரும்பியது. முகாம்களில் நெருக்கமாக அடைக்கப்பட்டு, பாதுகாப்பான உணவு, நீர், சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளை அளிப்பதற்கான போதுமான கட்டமைப்புகள் இன்றி அவர்கள் வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில், இலங்கை அரசு அவர்களில் உள்ள புலி ஆதரவாளர்களைப் பிரித்தெடுக்கும் வரை, இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் அனைவரும் அந்த முகாம்களிலேயே வைக்கப்படுவார்கள் என்று அறிவித்தது.

தொடர்ந்த வாரங்களில், பல நூறு எண்ணிக்கையிலான தமிழ் இளைஞர்கள் முகாம்களில் இருந்து காணாமல் போவதும், பாதுகாப்பு படையினர் அல்லது அரசின் ஆதரவு பெற்ற ஒட்டுக் குழுக்களால் கூட்டிச் செல்லப்படுவது குறித்தும் பெரும் எண்ணிக்கையிலான புகார்கள் எழுந்தன. நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

அய்ந்து மாதங்களுக்கு மேல் தமிழ் மக்கள் இவ்வாறு முகாம்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறித்து எழுந்த உலகளாவிய எதிர்ப்பினைத் தொடர்ந்து, அதில் குறிப்பிடத் தகுந்த எண்ணிக்கையிலானவர்கள் மீள் குடியமர்த்தப்படுவார்கள் என அரசு அறிவித்தது. இருப்பினும், பி.பி.சி. மற்றும் பிற செய்தி ஊடகங்கள் 'இவ்வாறு முகாம்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்கள், மீண்டும் ஊரை விட்டுத் தள்ளி உள்ள பிறிதொரு முகாமுக்கே கொண்டு செல்லப்பட்டனர்' என்று கூறின. தனது படையினர் மீது வைக்கப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் தொடர்ந்து மறுத்து வந்த இலங்கை அரசு, இக்குற்றச்சாட்டுகள் இலங்கையின் இறையாண்மை மீது தொடரப்பட்ட தாக்குதல் எனப் புறந்தள்ளியது.

www.tamilarangam.net

தமிழ்ப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று உள்ளூர் மக்களுடன் உரையாடுவதன் மூலம் உண்மைகளை வெளிக் கொணரும் வாய்ப்பினை அளிக்க, எந்த தேசிய அல்லது பன்னாட்டு ஊடகங் களுக்கோ, பிற நிறுவனங்களுக்கோ, அய்.நா. அமைப்பினருக்கோ அனுமதி அளிக்க இலங்கை அரசு மறுத்து விட்டது. இலங்கையின் தென் பகுதியில் – போர் நடத்தப்பட்ட முறை குறித்தும் உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட போர் நடைமுறைகள் மற்றும் மனித உரிமைகளின் அடிப்படையில் இலங்கை பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் குறித்தும் கேள்வி எழுப்புவது, தேசத் துரோகச் செய லாகவே பார்க்கப்பட்டது.

*இந்தப் பின்னணியில்தான் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம், கீழ்க்காண்ப வற்றை ஆராயுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது :*

1. உலகளாவிய குற்றவியல் நீதிமன்றத்தின் ‘ரோம்’ சட்டத்தில் மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் என விளக்கப்பட்டுள்ள முறையில், திட்டமிடப்பட்ட தாக்குதல்கள் நடைபெற்றனவா?

2. ‘ரோம்’ சட்டத்தின் மானுடத்திற்கு எதிரான குற்றங்களில் அழித் தொழிப்பு என்பதற்கு அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தின்படி, தமிழ் மக்களில் ஒரு பகுதியினரை அழித்தொழிக்கும் நோக்கத்துடன் – உணவு மற்றும் மருத்துவ உதவிகள் மறுக்கப்பட்டு, அவர்கள் வாழ்வியல் நிலைகளில் பாதிப்புகள் ஏற்படுத்தப்பட்டனவா?

3. தாமாகவே முன் வந்து இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த போர்க் கைதிகளை கொலை செய்ததன் மூலம், இலங்கை அரசுப் படைகள் உலகளாவிய போர்ச் சட்டங்களை மீறியிருக்கின்றனவா? தாங்கள் பிடித்த அல்லது தங்களிடம் சரணடைந்த தமிழர்களை இலங்கை ஆயுதப் படையினர் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கினரா? கைதிகளின் சுயமரியாதையைப் பாதிக்கும் வகையிலான கொடுமைகளோ, அவர்களை அவமானப்படுத்தும் அல்லது தரந் தாழ்த்தும் நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்பட்டனவா?

4. பாலியல் வன்கொடுமைகளும் வன்புணர்வும் போர் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டனவா?

5. ‘வலுக்கட்டாயமாக காணாமல் அடிப்பது’ குறித்த ரோம் சட்டத்திற்கு எதிராகத் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டனரா? காணாமல் ஆக்கப்பட்டனரா?



6. உலகளாவிய சட்டங்களுக்கு முரணாக, தமிழ் மக்கள் பெருமளவில் வெளியேற்றப்பட்டனரா? அல்லது தடுத்து வைக்கப் பட்டனரா?

7. மக்கள் அடர்த்தியாக இருந்த இடங்களில் கன ரக ஆயுதங்க ளையும் விமானத் தாக்குதல்களையும் மேற்கொண்டதன் மூலம் – இலங்கை ஆயுதப் படையினர் போர்க் குற்றங்களைப் புரிந்துள்ளனரா? உலகளாவிய சட்டங்களால் தடை செய்யப்பட்டுள்ள ஆயுதங்களான கொத்துக் குண்டுகள், இரசாயன தன்மையுள்ள குண்டுகள் போன்ற வற்றை அவர்கள் பயன்படுத்தினரா?

8. இறந்து போனவர்களின் உடல்களைச் சேதப்படுத்துவதன் மூலம், போர்க் குற்றங்களை இலங்கை அரசு படைகள் புரிந்தனவா?

இந்தத் தீர்ப்பாயம், இலங்கை அரசு புரிந்த குற்றங்களை மட்டுமே விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது; விடுதலைப் புலிகள் புரிந்தவற்றைக் குறித்து அல்ல.

இதற்குக் காரணம் என்னவெனில், இம்மாதிரியான மனித உரிமை சட்டங்கள் அரசிடமிருந்து மக்களை காக்கவே உருவாக்கப்பட்டன. தனி மனிதர்களோ, ஒரு குழுவினரோ புரியும் குற்றங்களை தண்டிக்க அரசு இருக்கிறது. ஆனால், அரசு புரியும் குற்றங்கள் பெரும்பாலும் கவன ஈர்ப்பின்றியே போய்விடுகின்றன. ஏனெனில் தனது நடவடிக் கைகளை விசாரிக்கவோ, தண்டிக்கவோ அரசு விரும்புவதில்லை.

உலகளாவிய சட்டங்களில் உள்ள மனித உரிமை மீறல்களுக்கான பிரிவுகள் அரசுக்குப் பொருந்துவதாகவே உள்ளன. இந்தக் கோட் பாட்டின் அடிப்படையில் விசாரணையை மேற்கொள்வதே இத்தீர்ப்பாயத்தின் நோக்கம்.

●

# போர் நிறுத்தமும்

## அமைதிப் பேச்சுவார்த்தைகளின் முறிவும்

**போர் நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்த – ஆக்கப் பூர்வமான முறையில் தலையிட்டோ, சமநிலையில் கையாளவோ, அடைந்துவிட்ட பலன்களை முன்னிறுத்தவோ பன்னாட்டுச் செயல்பாட்டாளர்கள் தவறிவிட்டதாக சுட்டிக்காட்டப்படுகிறது.**

விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமான சண்டைநிறுத்தம் அறிவித்ததைத் தொடர்ந்து பிப்ரவரி 22, 2002 அன்று, இலங்கை அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் நிரந்தரப்போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. நார்வே சமாதானக் குழுவினர் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். நிதியுதவி வழங்கி வந்த நாடுகளான அய்ரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான், நார்வே ஆகியவற்றின் இணைத் தலைமைகள் – நார்வேக்கு பக்கத் துணையாக சமாதான நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டன.

''இலங்கையில் நிலவும் சிக்கலுக்கு பேச்சுவார்த்தைகளின் மூலம் ஒரு தீர்வை அடைவதே'' ஒட்டுமொத்த நோக்கமாக இருந்தது. போர் நிறுத்த ஒப்பந்தத்தின் நோக்கம் – ''பேச்சுவார்த்தைகளை நோக்கி முன்னேறவும், ஒரு நீடித்த தீர்வை எட்டவும், ஒரு நேர்மறையான சூழலை உருவாக்குவதே'' ஆகும். போர்நிறுத்த ஒப்பந்த மீறல்களைக் கண்காணிக்க '**இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு**' என்ற சுதந்திரமான குழு உருவாக்கப்பட்டது. இதன் உறுப்பினர்கள் பெரும்பாலும் நார்வே, ஸ்வீடன், பின்லாந்து, டென்மார்க் மற்றும் அய்ஸ்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். போரினால் கடுமையான பாதிப்புக்குள்ளான இலங்கை மக்கள் – தமிழர்களும் சரி, சிங்களர்களும் சரி – போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஆதரவாகவே இருந்தனர். அவர்களைப் போலவே இலங்கையின் வணிக சமூகமும் அவர்களின் வெளிநாட்டுக் கூட்டாளிகளும் கூட இதனை வரவேற்றனர்.



போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு சில உடனடிப் பலன்கள் கிடைத்தன. ஒப்பந்தத்தினால் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஆறு சுற்று நேரடிப் பேச்சு வார்த்தைகள் நடக்க வாய்ப்பு ஏற்பட்டது. ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒருவர் மீது ஒருவர் கொண்ட நம்பிக்கை மீட்டெடுக்கப்பட்டது. அனைத்து சமூகத்தினரும்ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டவர்களாக வாழவும், இனங்களுக்கு இடையே உறவை தொடங்கவும் புதிய அரசியல் சமூக வெளிகள் திறந்து விடப்பட்டன. யாழ்ப்பாண தீபகற்பத்திற்கான ஒரே தரை வழிப் பாதையான ஏ–9 பாதையைத் திறப்பதன் மூலம் வடக்கையும் தெற்கையும் மீண்டும் இணைக்க ஒப்பந்தம் உதவியது.

போர் நிறுத்தத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை கடந்து, அதன் பலன்கள் குறைந்த காலமே நிலைத்தன. போர் நிறுத்த ஒப்பந்தம் சிறிது சிறிதாகச் செயலற்றுப் போனது. ஆறு சுற்றுப் பேச்சு வார்த்தைகள் ஒரு கணிசமான வெற்றியை ஈட்டியிருந்த போதும், ஒட்டு மொத்த முக்கியத்துவம் தேயத் தொடங்கியது. 2005இன் பிற்பகுதியில் ஆங்காங்கே தொடங்கிய மோதல்கள் சூலை 2006க்குப் பிறகு பெரிதாயின. கடும் இராணுவ நடவடிக்கைகளின் மூலம் இலங்கை அரசு விடுதலைப் புலிகளை, கிழக்கு மாகாணத்திலிருந்து முற்றிலுமாக வெளியேற்றியது. பின்னர் அது தனது நடவடிக்கைகளை வடக்கு நோக்கி நகர்த்தியது.

ஒப்பந்தம் கையெழுத்தாகி அய்ந்து ஆண்டுகளுக்குப் பிறகு, 2007இல் பெரும் உயிர்ச் சேதங்கள், மனித உரிமை மீறல்கள், பெருமளவிலான இடப்பெயர்வுகள் என அந்தச் சூழல் – அறிவிக்கப்படாத போர் என்றே வர்ணிக்கப்பட்டது. கிழக்குப் பகுதியில் தங்கள் தாக்குதல்களை முடித்த பிறகு ''கெரில்லா படைகள் நிர்வகிக்கும் பகுதிகளை'' மீட்க, வடக்குப் பகுதியை நோக்கித் தனது படைகள் நகரும் என இலங்கை அரசு அறிவித்தது. சனவரி 2, 2009 அன்று போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து தான் விலகிக் கொள்வதாக இலங்கை அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இரண்டு தரப்பினரும்ஒப்பந்தத்தை மீறியதாக ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டனர். இதனால் ஒருவர் மீது ஒருவர் மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்தும் சூழல் வலுவற்றுப் போனது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் தோல்விக்குப் பல காரணங்கள் உள்ளன. தொடர்ந்து போர் நிறுத்தத்தை மீறியதாக விடுதலைப் புலிகள் மீது இலங்கை அரசு குற்றம் சாட்டிய அதே வேளையில், நம்பிக்கையை குலைக்கும்வகையில்இலங்கை அரசும் அதன் படைகளும் நடந்து கொண்டதாகவும், போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்த

www.tamilarangam.net

தமிழ் மக்களுக்கு சமாதானத்தின் பங்கை அளிக்காமல் தட்டிக் கழிப்பதாகவும் இலங்கை அரசை விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டினர். கூடுதலாக, எதிர் தரப்பின் முக்கிய தனி நபர்களை குறி வைத்துக் கொன்றதாக – இருவரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டனர்.

போரினால் சிதைக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்புப் பணிகளையும் மறுகட்டமைப்புப் பணிகளையும் தொடங்குவதற்கு இலங்கை அரசு தாமதப்படுத்தியதும், மக்களின் சமூக, பொருளாதார நலன்களைப் பேணத் தவறியதும் நம்பிக்கையை மேலும் குலைக்க உதவியது. முக்கியமாக, இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட 'சுனாமி'க்குப் பிறகு, தமிழர்கள் தாங்கள் ஒதுக்கப்பட்டதாகவும், தனிமைப்படுத்தப்பட்டதாகவும், பாகுபடுத்தப்பட்டதாகவும் உணர்ந்தனர். அதனால் மேலும் அவநம்பிக்கையே ஏற்பட்டது.

தமிழ் மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்து, அவர்களின் வாழ்நிலையை மேம்படுத்தக் கூடிய எந்த நேர் மறையான முன்னேற்றத்தையும் தடுக்க, தீவிர சிங்கள தேசியவாதிகள் தங்களால் ஆன அனைத்து முயற்சிகளையும் மேற் கொண்டனர். போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்திலிருந்தே அவர்கள் அதனை எதிர்த்து வந்திருக்கின்றனர். அன்றிலிருந்து அதை முறிக்கவும் வலுவற்றதாக ஆக்கவும் தங்களால் ஆன அனைத்தையும் செய்து வந்திருக்கின்றனர்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்த ஆக்கப் பூர்வமான முறையில் தலையிட்டோ, சமநிலையில் கையாளவோ, அடைந்துவிட்ட பலன்களை முன்னிறுத்தவோ பன்னாட்டுச் செயல்பாட்டாளர்கள் தவறிவிட்டதாக சுட்டிக்காட்டப்படுகிறது. குறிப்பாக, அமெரிக்காவும் பிரிட்டிசாரும் பிறரும் சொல்லாலும் செயலாலும் வன்முறையை முற்றிலுமாக கைவிடவேண்டும் என விடுதலைப் புலிகளை தொடர்ந்து வற்புறுத்தியதன் மூலம் அவர்களை வலுவிழக்கச் செய்யவும், சமாதானத்தின் பால் அவர்கள் கொண்ட அர்ப்பணிப்பைத் தகர்க்கவும் முயன்றதாக குற்றஞ்சாட்டப்பட்டனர். **போர் தொடங்கும் முன்பே அய்ரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது தடை விதித்தது பெரும் தவறாகப் பார்க்கப்படுகிறது. அந்தச் செயலானது சமாதான நடவடிக்கைகள் தொடர்வதற்கு தேவையான விடுதலைப் புலிகளின் சமநிலையைக் குறைத்தது.**

மேலும், வாஷிங்டனில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் அவர்கள் இணைக்கப்படாததன் காரணமாக, புலிகள் நேரடியான பேச்சு வார்த்தைகளிலிருந்து விலக நேர்ந்ததாகக் கூறப்படுகிறது. அதோடு, அரசாங்க கருவூலத்தைத் தவிர வேறு எந்த ஒருங்கிணைந்த நிதியத்திற்கும் பணம் அனுப்ப முடியாது என வலியுறுத்தியதன் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளில், புனரமைப்பு மற்றும் மறு கட்டமைப்புப் பணிகளை இணைத்து மேற்கொள்ள, ஒருங்கிணைந்த முறையாக உருவாக்கப்பட்ட 'சுனாமிக்குப் பிறகான நடவடிக்கைகள் – மேலாண்மை' கட்டமைப்பை அமெரிக்கா வலுவிழக்கச் செய்தது. இலங்கை அரசு இலங்கையில் விடுதலைப் புலிகளை தடை செய்யாத நிலையில், அய்ரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகள் இயக்கத்தை பயங் கரவாத இயக்கங்கள் பட்டியலில் இணைத்ததன் மூலம் 2006இல் மேலும் ஒரு பின்னடைவு ஏற்பட்டது.



போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த ஆறு ஆண்டு காலம் முழுவதும் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க அமைக்கப்பட்ட சுதந்திரமான, சார்பற்ற அமைப்பான போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, ஒப்பந்தத்தை மீறியதாக இரண்டு தரப்பினரையும் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வந்தது. சனவரி 2008இல் இலங்கை அரசு தன்னிச்சையாக ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொண்டதன் காரணமாக, தனது நடவடிக்கைகளை அது நிறுத்திக் கொள்ளும் வரையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, சிக்கல் நிலவிய பகுதிகளில் தனது கண்காணிப்பைத் தொடர்ந்தது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு இரண்டு முக்கிய நோக்கங்கள் இருந்தன. ஒன்று, போர் நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் துணை நிற்பது. இரண்டாவதாக, ஒப்பந்த மீறல்களை கண்காணித்து, அதனை விசாரித்து அறிக்கை அளிப்பது. போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டதற்குப் பிறகான காலத்தில், ''குறிப்பிடத்தகுந்த மற்றும் கவனிக்கத்தக்க வகையில் வன்முறை குறைந்திருந்தது'' எனப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு குறிப்பிடுகிறது.

சில சிறிய பின்னடைவுகளைத் தவிர்த்ததும், போர் நிறுத்த ஒப்பந்தத்தின் தொடக்க காலத்தில் மோதல்கள் குறைந்ததும், நேரடிப் பேச்சுவார்த்தைகளில் முக்கிய முடிவுகள், முன்னேற்றங்கள் கண்டதுமாக போர் நிறுத்த ஒப்பந்தம் முன்னேற்றப் பாதையிலேயே சென்றது. இருப்பினும், இந்த வெற்றியானது இரு தரப்பினரின் வலுசம நிலையைப் பொருத்திருந்தது. அது தகர்க்கப்பட்ட போது, அதிலும் குறிப்பாக வாஷிங்டனில் நடந்தவற்றிற்குப் பிறகு, போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுவதில் பின்னடைவு ஏற்படத் தொடங்கியது. அதன் விளைவாக, புதிய மோதல்கள் நிகழ்ந்தன. அவை வளர்ந்து ஒரு முழு போராக மாறியது. இலங்கையை மீண்டும் ஒரு கொலைக் களமாக மாற்றி விட்டது.

www.tamilarangam.net

# போரின் இறுதி வாரங்களில் நடைபெற்ற அட்டூழியங்கள்

இந்த உள்நாட்டுப் போர் 'சாட்சிகளற்ற போர்' என்பது, பலமுறை தனது பணிகளின் போக்கில் இத்தீர்ப்பாயத்திற்கு நினைவூட்டப் பட்டது. ஏனெனில், இலங்கை அரசு எவ்வித தேசிய, பன்னாட்டு ஊடகங்களையும் போர்ப் பகுதிகளில் அனுமதிக்கவில்லை.

தீர்ப்பாயத்தின் அறிக்கையின் இந்தப் பகுதி, போர் நிறுத்த ஒப்பந்தம் முறிந்ததன் காரணமாக ஏற்பட்ட கொடுமையான விளைவுகளையும், குறிப்பாக விடுதலைப் புலிகள் படையினர் மற்றும் அவர்களோடு தொடர்புடைய பொது மக்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்ட இராணுவ மற்றும் பிற நடவடிக்கைகள் மீதும் கவனம் செலுத்துகிறது.

பொதுவான பார்வையாளர்கள் முன் பல தொண்டு நிறுவனங்கள், தற்பொழுது இலங்கையில் உள்ள 'உள்நாட்டுப் போரின்' நிலை குறித்து நிபுணர்கள் அளித்த பல அறிக்கைகளைத் தீர்ப்பாயம் கேட்டது. பெரும் எண்ணிக்கையிலான பாதிக்கப்பட்டவர்கள், மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் புலம் பெயர்ந்த தமிழர்களின் வாக்குமூலங்களை அவர்களின் பாதுகாப்பை மனதில் கொண்டு, அவர்கள் அடையாளத்தை மறைக்க 'உள்ளக விசாரணை' முறையில் தீர்ப்பாயம் விசாரித்தது.

இந்த உள்நாட்டுப் போர் 'சாட்சிகளற்ற போர்' என்பது, பல முறை தனது பணிகளின் போக்கில் இத்தீர்ப்பாயத்திற்கு நினைவூட்டப் பட்டது. ஏனெனில், இலங்கை அரசு எவ்வித தேசிய, பன்னாட்டு ஊடகங்களையும் போர்ப் பகுதிகளில் அனுமதிக்கவில்லை. உண்மையில், தொடக்கக் காலத்தில் பலியானவர்கள், பெரும்பாலும் அடையாளம் தெரியாத நபர்களால் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களே! விமர்சன கருத்துகளை ஊமையாக்க நினைத்த இலங்கை அரசின் திட்டங்களுக்கு ஏற்ப நடைபெற்றதாகவே இவை இருந்தன. பெரும்பாலான நிபுணர்கள் மற்றும் சாட்சிகளின் கருத்தின்படி, இது ஓர் உள்நாட்டுப் போர். இன அழிப்பைச் செயல்படுத்தும் ஒரு நடவடிக்கை. சொல்லப் போனால் இனப்படு கொலை என்றே கூறலாம். இதை ஊடகங்களிடம் பகிர்ந்து கொள்ள இலங்கை அரசு தயாராக இல்லை. மாறாக, கொள்கைகள் குறித்தும், போர், எண்ணிக்கைகள் மற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள மக்களின் நலன் குறித்தும் தவறான தகவல்களைக் கொழும்பு பரப்பியது.

இந்த தவறான தகவல்கள், இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டு, கனரக ஆயுதத் தாக்குதல்கள் மற்றும் வான் வழித் தாக்குதல்களுக்கு ஆளாகும் நிலையில், புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் உள்ள மக்கள் தொகையைக் குறைவாகவே கணக்கிட்டது. புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் மிகவும் சுருங்கிய நிலையில் இறுதியாக நடைபெற்ற பாரிய இடப்பெயர்வு தொடங்கிய போது தான், அவ் வாறு இடம் பெயர்ந்த மக்களை எண்ணியபோதுதான் – அரசு தவறான தகவல் கொடுத்தது, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகங்களுக்குத் தெரிய வந்தது.

இராணுவம் மேற்கொண்ட அட்டூழி யங்கள் பொது மக்களோடு தொடர்புடையவையாகவே இருந்தன. போர் விமானங்கள் மூலம் கொத்துக் குண்டுகள் வீசப்பட்டதற்குச் சான்றுகள் உள்ளன. சர்வதேச சட்டங்களுக்கு முரணாக வெள்ளை பாஸ்பரஸ் பயன்படுத்தப் பட்டதாக சில சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளனர். காயம்பட்ட பொதுமக்களின் உடல்களில் தீக்காயங்களை பல சாட்சிகள் கண்டுள்ளனர். பிறர் 'நாபாம்' போடப்பட்டதன் அறிகுறிகள் வெளிப்படையாக இருந்ததாக நம்புகின்றனர். வேறு பல எரியும் தன்மையுள்ள பொருட்களுக்கான ஆதாரங்கள் இருந்ததை, இம் மாதிரியானவைகளால் காயம்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் மக்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் உறுதி செய்துள்ளனர். நூற்றுக்கணக்கான உயிரற்ற உடல்கள் காணப்பட்டதை பல சாட்சிகள் உரைத்தனர்.

www.tamilarangam.net

இதன் மூலம் காயம்பட்ட பலரோடு, பொது மக்களின் சாவு எண்ணிக்கை மிக அதிகமாக இருந்திருக்கிறது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் குறைந்த நிலையில், மனித நலன் சார்ந்த பொது கட்டமைப் புகள் அழிக்கப்பட்டது சாதாரண நிகழ்வாக இருந்தது. குறிவைக்கப்பட்டவர்களில் பெண்களும் குழந்தைகளும் இருந்தனர்.

மருத்துவமனைகள், பள்ளிகள் போன்ற பொது கட்டமைப்புகள் உள்ளிட்ட பொதுமக்கள் வாழ்விடங்களில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவம் நடத்திய தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதலானது, ஜெனிவா ஒப்பந்த மீறலாகும். குடிநீர்ப் பற்றாக்குறை, அடிப்படை மருத்துவ வசதிகள் இன்மை, தொடர்ந்து கல்வி வசதிகள் கிடைக்காத தன்மை ஆகியவற்றால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அவர்களின் அனைத்து அடிப்படை மனித உரிமைகளும் பறிக்கப்பட்டன. மேலும் இச்சூழலில், பொது மக்களின் சாவு எண்ணிக்கையும் மிக அதிகமாக இருந்தது. அய்க்கிய நாடுகள் அவையின் உள் ஆவணங்களின் படி, ஏப்ரல் 2009 வரை, வான் வழித் தாக்குதல் மற்றும் கனரக ஆயுதங்களின் பயன்பாடு காரணமாக, ஒரு நாளைக்கு 116 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதோடு போரின் இறுதி வாரங்களில் மட்டும் 20 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டதாக பிரித்தானிய மற்றும் பிரெஞ்சு ஊடகங்கள் தெரிவித்தன.

சட்ட விரோதமான ஆயுதங்களைப் பயன்படுத்தியோ, பயன்படுத்தாமலோ, தமிழ் மக்களை அழித்தொழிக்க முயல்வது என்பதே ஒரு வகையான போர்க் குற்றமாகும். ஆயுத மற்றும் அரசியல் எதிர்ப்புகளை அடக்குவதன் மூலம் இலங்கை அரசு தமிழ் மக்களை இனப் படுகொலை செய்வதையே தனது நோக்கமாகக் கொண்டிருந்ததா என்ற கேள்வி எழுகிறது. நிபுணர்கள் மற்றும் நேரடி சாட்சிகள் மூலம் இராணுவம் முற்றிலும் பொது மக்கள் வாழ்விடங்களாக மட்டும் இருந்த பகுதிகளான – மருத்துவ மனைகள், தப்பிச் செல்லும் இடம் பெயரும் மக்கள் மற்றும் நிறைய கிராமங்கள் போன்றவற்றையே தாக்கியதாக உறுதியாகத் தெரிகிறது. மேலும், தாமாக முன் வந்து சரணடைந்த தமிழ் மக்கள் மற்றும் விடு தலைப் புலிகள் இயக்கத்தின் கைதிகள் ஆகியோர் இராணுவத்தால் கொலை செய்யப்பட்டதற்கு போதுமான ஆதாரம் உள்ளது. இது இன அழிப்புக் குற்றச்சாட்டிற்கும் சர்வதேசச் சட்டங்களை மீறியதான குற்றச்சாட்டிற்கும் பெரிதும் சான்றுகளாக உள்ளன.



எந்த ஒரு முடிவுக்கும் வரும் முன்னர் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட பிற அடக்குமுறைகள் மற்றும் வன்கொடுமைகள் குறித்தும் ஆராய வேண்டும். இடம் பெயர் 'முகாம்கள்' அல்லது 'தடுப்பு முகாம்கள்' (வாக்குமூலங்களில் குறிப்பிட்டுள்ளபடி) பற்றிய சாட்சிகளின் வாக்குமூலங்கள் கவனத்திற்குரியவை. தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்கள் தங்கள் சொந்த வீடுகளுக்குத் திரும்பும் வரையிலோ, மறு குடியமர்த்தப்படும் வரையிலோ தங்குவதற்கான இடைத் தங்கல் முகாம்கள் என்று அரசாங்கத்தால் வர்ணிக்கப்படும் இம்முகாம்கள், நலன்புரி கிராமங்களாகவே அரசால் ஒதுக்கப் பட்டுள்ளன. அப்படி 15 முகாம்கள் ஒதுக்கப்பட்டன. அந்த முகாம்க ளில், ஜெனிவா ஒப்பந்தமும் மனித உரிமைக்கான அனைத்துலக அறிக்கையும் தொடர்ந்து மீறப்படுகின்றன.

அந்த முகாம்களுக்குள் நடைபெற்ற பல வேதனையான நிகழ்வுகள், தீர்ப்பாயத்தின் உறுப்பினர்களிடம் புகார் செய்யப் பட்டன. ஒருவருக்கு ஒதுக்கப்படும் வாழ்விடம் மிகச் சிறியதாக இருந்தது. கூரை தகரத்தால் போடப்பட்டிருந்தது. இதனால் வெயில் காலங்களில் வெப்பத்தினால் உடல் நலன் பாதிக்கப்பட்டு, சரும நோய்கள் ஏற்படுகின்றன. பலர், குறிப்பாக குழந்தைகள், பெண்கள் மற்றும் வயதானவர்கள் காலரா மற்றும் சத்துக் குறைவினால் மரண மடைந்திருக்கின்றனர். நீர் வழங்கல் ஒரு முக்கியப் பிரச்சனையாக இருந்தது. ஒரு குடும்பத்தின் அனைத்துத் தேவைகளுக்கும் ஒரு நாளைக்கு 5 லிட்டர் நீர் மட்டுமே வழங்கப்பட்டது. இது போதாதது மட்டுமல்ல; சுகாதாரச் சீர்கேட்டிற்கும் வழி வகுத்தது.

அடிப்படை சுகாதாரம், கழிவறைப் பயன்பாடு மற்றும் துணி துவைப்பதற்குத் தேவையான நீர் கிடைக்கவில்லை. அதிலும் பெரும்பாலானவர்களுக்கு உடுத்தியிருந்த உடை மட்டுமே இருந்தது. குப்பைகள் அந்தந்த இடங்களிலேயே கிடந்தன. கழிவுத் தொட்டிகள் சிமென்ட்டால் கட்டப்படாததால் அடிக் கடி உடைந்து, கழிவு நீர் வெள்ளமாக வெளியேறி, சில சமயங்களில் சில குழந்தைகள் அவற்றில் மூழ்கி இறக்கும் அளவிற்கு இருக்கிறது. நிறைய குழந்தைகள் பெற்றோர் இருவரையும் இழந்து ஆதரவற்று இருக்கின்றனர்; அல்லது பெற்றோரில் ஒருவரின் ஆதரவில் மட்டும் உள்ளனர். இதனால் முகாம்களில் நிலவும் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் ஆபத்துகளுக்கும் ஆளாக நேர்கிறது.ஏற்றுக் கொள்ள முடியாத மற்றொரு அரசுக் கொள்கை என்னவெனில், தமிழ் மக்களைக் கொடுமைக்கு

www.tamilarangam.net

உள்ளாக்கி அவர்களைப் பணிய வைக்கும் ஆயுதமாக உணவு வழங்கலை நிறுத்தி வைத்தது. உணவு வழங்கலைத் தடை செய்தது மற்றும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்த மக்களின் எண்ணிக்கையைக் குறைத்து மதிப்பிட்டது ஆகியவை – ஆபத்தான உணவுப் பற்றாக்குறைக்கு வழிகோலின. மேலும் கூடுதலாக, தமிழ்ப் பகுதிகளுக்கு மருந்து வழங்கலைத் தடை செய்தது ஏற்றுக் கொள்ளப்பட முடியாததும் மனித உரிமைச் சட்டங்களுக்கு எதிரானதும் ஆகும்.

அழிக்கப்பட்ட கிராமங்களிலும், 'நலன்புரி கிராமங்களிலும்' அரசும் இராணுவமும் பெண்கள் மீது நடத்திய பாலியல் வன் கொடுமைகளும், வல்லுறவுகளும் போர்க் காலம் முழுவதிலும் அரசபடையால் தொடர்ந்து நடத்தப்பட்ட மற்றுமொரு பாரிய கொடுமையாகும். மானுடத்திற்கு எதிரான குற்றமாக 'ரோம்' சட்டத்தில் குறிக்கப்படும் இது, கருக்கலைப்பு, குடும்பப் பெருமைக்கு இழுக்கு, அவமானம் மற்றும் மன உளைச்சல்களுடன் வாழ முடியாமல் பாதிக்கப்பட்ட பெண்கள் தற்கொலை செய்து கொள்ளுதல் போன்ற மேலும் பல துயரங்களுக்கு வித்திட்டது. இப்படிக் குறிவைத்து நடத்தப்படும் கொடுமைகளுக்கு, போர்ப் பகுதிகளுக்கு வெளியில் வாழும் தமிழர்களும் பலியாயினர். பெரும் எண்ணிக்கையில் இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டமை தவிர, கடத்தல், படுகொலை, முன்அறிவிப்பற்ற கைதுகள், தடுத்து வைத்தல், பாலியல் வன்கொடுமைகள் மற்றும் துன்புறுத்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அச்சுறுத்தல் பிரச்சாரமும் நடந்தது.

மேலே உள்ள பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளை, மனித உரிமைக் கண்காணிப்பகம் (28.7.2009 மற்றும் 24.11.2009), அம்னஸ்டி இன்டர்நேஷனல் (10.8.2009) மற்றும் கொள்கை மாற்றுகளுக்கான மய்யம் (செப்டம்பர் 2009) ஆகியவற்றின் அறிக்கைகளில் காணலாம்.

தமிழ்த் தலைவர்களை குறிவைத்து படுகொலை செய்தல் மற்றொரு கொடுமையாக இருந்தது. அதிலும் இப்படியான படுகொலைகளில் முக்கியமாக, இராணுவத்தின் படுகொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்களான **ஜோசப் பரராஜசிங்கம், நடராசா ரவிராஜ்** மற்றும் **டி. மகேசுவரன்** ஆகியோர் குறிவைத்துக் கொல்லப்பட்டது முக்கியமானது.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என அறிவித்த



1979இன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், பல்வேறு கொடுமைகளுக்கு வழிவகை செய்த அரசின் கொள்கைகளுள் முக்கியமானதாகும். அது சட்டத்திலும் இராணுவச் சட்ட அமைப்பிலும் உள்ள பாதுகாப்புகளை குறைத்து, அவற்றைத் தவறாகப் பயன்படுத்த வழி செய்தது.

இறந்தவர்களின் உடல்கள் அவமரியாதை செய்யப்பட்டதும் சாட்சிகள் மூலம் தெரிய வருகிறது.

சுருக்கமாக, விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலை நீக்கவும், தமிழ் மக்கள் மீது தனது ஆதிக்கத்தை செலுத்தவும், இலங்கை அரசு, உலகளாவிய சட்டங்கள், ஜெனிவா ஒப்பந்தம் மற்றும் மனித உரிமைப் பிரகடனம் ஆகியவற்றிற்கு எதிரான ஓர் இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்தது. இதனால் விளைந்த கொடுமைகளான வல்லுறவு, துன்புறுத்தல், படுகொலைகள், 'காணாமல் போதல்' மற்றும் உணவு, நீர் மற்றும் மருந்து வழங்கலை தடை செய்தமை ஆகியவை தமிழ்ச் சமூகத்தின் இருப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தன. கனரக ஆயுதங்கள் மற்றும் சட்டவிரோத ஆயுதங்களான வெள்ளை பாஸ்பரஸ் மற்றும் கொத்து குண்டுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியதானது, உலகளாவிய சட்ட நிலைகளுக்கு அப்பால் இலங்கை அரசை நிறுத்தியுள்ளன. வன் கொடுமைகள், இன அழிப்பு, சொல்லப் போனால் இனப் படு கொலை ஆகிய குற்றங்கள், கொழும்பில் திட்டமிடப்பட்டன என்பது வியப்பளிக்கவில்லை. போர்க் குற்றங்களும், மானுடத்திற்கு எதிரான குற்றங்களும் நடந்துள்ளன என்பது தெளிவாகத் தெரிகிறது.

●

# ஆவணங்களின் திறனாய்வு

‘பயங்கரவாதிகள்’ அல்லது வேறு ஏதேனும் தீவிர பெயரில் முத்திரை குத்தப்பட்ட மக்கள், ஒட்டுமொத்த மனித இனத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டு, அதனால் மனித உரிமைச் சட்டத்தின்படி உறுதி செய்யப்பட்ட எந்த பாதுகாப்பையும் அனுபவிக்க முடியாது. இந்த கருத்தானது, மனித உரிமைச் சட்டங்களின் இருப்பையே மறுப்பதாகும்.

பல்வேறு தொண்டு நிறுவனங்கள், பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலங்கள், நேரடி சாட்சிகளின் வாக்குமூலங்கள், நிபுணர்களின் வாக்குமூலங்கள், ஊடக அறிக்கைகள் என இத்தீர்ப்பாயத்தின் முன் வைக்கப்பட்ட மெய்நிலைகளின் அடிப்படையில், கடந்த 2002 முதல் (போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதிலிருந்து) இன்று வரை, இலங்கை அரசால் மூன்று வகையான மனித உரிமை மீறல்கள் செய்யப்பட்டுள்ளன என நாங்கள் வரையறுக்கிறோம்.

● தமிழ் மக்கள் மீது குறி வைத்து நடத்தப்பட்ட வலுக் கட்டாயமாக ‘காணாமல் அடித்தல்’ ● போர் மீண்டும் தொடங்கிய பிறகு நடந்த குற்றங்கள் (2006 – 2009), குறிப்பாக போரின் இறுதி மாதங்களில் ● இராணுவ இலக்குகள் அல்லாத மக்களின் பொதுக் கட்டமைப்புகளான மருத்துவமனைகள், பள்ளிகள் ஆகியவற்றின் மீது குண்டுவீச்சு நடத்தியது ● அரசு அறிவித்த ‘பாதுகாப்பு வலையங்கள்’ மற்றும் ‘தாக்குதலற்ற பகுதிகள்’ மீது குண்டுவீச்சு நடத்தியது. ● போர்ப் பகுதிகளில் உணவு, நீர் மற்றும் மருத்துவ வசதிகளைத் தடுத்தது ● கனரக ஆயுதங் கள், தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வான் வழித் தாக்குதல்களைப் பயன்படுத்தியது ● உணவு மற்றும் மருந்தைப் போர் ஆயுதங்களாகப் பயன்படுத்தியது ● கைது செய்யப்பட்ட அல்லது சரணடைந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களை மோசமாக நடத்தியது, துன்புறுத்தியது மற்றும் கொலை செய்தது ● துன்புறுத்தல் ● பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் மற்றும் வல்லுறவு ● தனி நபர்கள் மற்றும் குடும்பங்களை வலுக் கட்டாயமாக வெளியேற்றியது ● இறந்து போனவர்களின் உடல்களை சேதப்படுத்தியது ● போரின் போதும் அதற்குப் பிறகும் இடம் பெயர்ந் தோர் முகாம்களில் நடந்த மனித உரிமை மீறல்கள் ● தமிழ் மக்கள் மற்றும் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்களைச் சுட்டுக் கொலை செய்தது ● வலுக்கட்டாயமாக காணாமல் அடித்தது ● வல்லுறவு ● சத்துக்குறைவு ● மருத்துவ உதவிகள் பற்றாக்குறை.



### போர்க் குற்றங்கள்

மேலே இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களானது – இலங்கை அரசாங்கம், அதன் பாதுகாப்புப் படைகள், அதனுடன் இணைந்த துணை ஆயுதப் படைகள் ஆகியவை ஜெனிவா ஒப்பந்தம் மற்றும் ரோம் சட்டத்தின் பிரிவு 8இன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள ‘போர்க் குற்றங்கள்’ புரிந்துள்ளதை தெளிவாக்குகின்றன. ‘ரோம்’ சட்டத்தின் பிரிவு 8 கீழ் வருமாறு கூறுகிறது :

இந்தப் போரானது நாடுகளுக்கு இடையிலானது என்றால், கீழ்க் காணும் குற்றச்சாட்டுகள் பொருந்தும் :

(b)நிறுவப்பட்ட உலகளாவிய சட்ட அமைப்பின்படி நாடுகளுக்கு இடையிலான போர்களில் பின்பற்றப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் மரபுகளை மீறுவது என்பது, கீழ்க்காணும் செயல்களை உள்ளடக்கும் :

i பொது மக்கள் மீதோ அல்லது மோதலில் ஈடுபடாத தனி நபர்கள் மீதோ திட்டமிட்டு நடத்தப்படும் நேரடித் தாக்குதல்கள்.

ii இராணுவ இலக்கல்லாத பொதுக் கட்டமைப்புகள் மீது திட்டமிட்டுத் தாக்குதல் நடத்துவது.

iv தெரிந்தே திட்டமிட்டு ஒரு தாக்குதலை நடத்தி, அதன் மூலம் அதனால் கிடைக்கக் கூடிய இராணுவ லாபத்தை விட அதிகமாக உயிர்கள் கொல்லப்படுவது, பொது மக்களுக்கு காயம் ஏற்படுத்துவது, பொதுக் கட்டமைப்புகள், பொது மக்கள் உடைமைகள் ஆகியவற்றைப் பரவலாகச் சேதப்படுத்துவது, இயற்கைச் சூழலுக்கு நீண்ட கால மற்றும் பாரிய பாதிப்பினை ஏற்படுத்துவது ஆகியவை.

www.tamilarangam.net

vi ஆயுதங்களைக் கைவிட்டு விட்ட அல்லது ஆயுதங்கள் இல்லாத அல்லது தாமாக முன் வந்து சரணடைந்த ஒருவரைக் கொல்வது அல்லது காயப்படுத்துவது.

ix மதம், கல்வி, கலை, அறிவியல் அல்லது தொண்டுக்காக அர்ப் பணிக்கப்பட்ட கட்டடங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள், மருத்துவமனைகள் அல்லது இராணுவ இலக்காக அல்லாத காயம்பட்டவர்களோ, நோய்வாய்ப்பட்டவர்களோ கூடியிருக்கக்கூடிய இடங்கள் மீது நடத்தப்படும் திட்டமிட்ட தாக்குதல்கள்.

xxi சுயமரியாதைக்குக் களங்கம் ஏற்படுத்துவது போன்ற செயல்கள், குறிப்பாக அவமானப்படுத்துவது அல்லது மரியாதைக் குறைவாக நடத்துவது.

xxii வல்லுறவு, பாலியல் அடிமைத்தனம், வலுக்கட்டாய விபச்சாரம், பிரிவு 7 பத்தி 2 (F)இல் குறிப்பிடப்பட்டுள்ளபடியான வலுக்கட்டாய கர்ப்பம், வலுக்கட்டாய கருத்தடை அல்லது பிற வகையான பாலியல் வன் கொடுமைகள் ஆகியவையும் ஜெனிவா ஒப் பந்தத்திற்கு எதிரானவை ஆகும்.

xxv ஜெனிவா ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிவாரணப் பொருட்களை மக்களுக்கு கிடைக்கவிடாமல் செய்வது உட்பட, பொது மக்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையான பொருட்களைத் தடுப்பதன் மூலம் பட்டினியைப் போரில் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவது.

மோதல் உள்நாட்டுத் தன்மை உடையதாயின் கீழ்க்காணும் குற்றச்சாட்டுகள் பொருந்தும் :

(c) உலக அளவில் அல்லாத ஆயுத மோதலெனில், 12 ஆகஸ்ட் 1949 நாளிட்ட 4 ஜெனிவா ஒப்பந்தங்களில் பொதுவாக உள்ள பிரிவு 3அய் மீறுவதானது, மோதலில் நேரடி பங்கு கொள்ளாதவர்கள், அவர்கள் ஆயுதப் படையின் பகுதியாக இருந்தாலும், ஆயுதத்தை கைவிட்டவர்கள் அல்லது நோய், காயம் அல்லது தடுத்து வைப்பு அல்லது பிற காரணங்களுக்காக போரிலிருந்து விலக்கி வைக்கப்பட் டவர்களுக்கு எதிராகக் கீழ்க்காணும் செயல்களை செய்வதாகும்.

i உயிருக்கும் மனிதர்களுக்கும் எதிரான வன்முறை. குறிப்பாக எல்லா வகையிலான கொலைகள், சிதைத்தல், கொடூரமாக நடத்துதல் மற்றும் துன்புறுத்தல்.



ii சுயமரியாதைக்குக் களங்கம் ஏற்படுத்துவது போன்ற செயல்கள், குறிப்பாக அவமானப்படுத்துதல் அல்லது மரியாதைக் குறைவாக நடத்தல்.

iii பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்தல்.

iv அனைத்துச் சட்டப்பூர்வமான பாதுகாப்புகளும் வழங்கப்பட்ட நிலையில் நடைமுறையில் உள்ள ஒரு நீதிமன்றத்தால், அளிக்கப்பட்ட ஒரு முன்னோடித் தீர்ப்பு இல்லாத நிலையில் வழங்கப்படும் தண்டனைகள் அல்லது கொலைகள்.

(e) நிறுவப்பட்ட உலகளாவிய சட்ட அமைப்பின்படி, நாடுகளுக்கு இடையில் அல்லாத போர்களில் பின்பற்றப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் மரபுகளை மீறுவது என்பது, கீழ்க் காணும் செயல்களை உள்ளடக்கும் :

i பொது மக்கள் மீதோ அல்லது மோதலில் ஈடுபடாத தனி நபர்கள் மீதோ திட்டமிட்டு நடத்தப்படும் நேரடித் தாக்குதல்கள்.

iv மதம், கல்வி, கலை, அறிவியல் அல்லது தொண்டுக்காக அர்ப் பணிக்கப்பட்ட கட்டடங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள், மருத்துவ மனைகள் அல்லாது இராணுவ இலக்காக அல்லாத காயம்பட்டவர்களோ, நோய்வாய்ப்பட்டவர்களோ கூடியிருக்கக் கூடிய இடங்கள் மீது நடத்தப்படும் திட்டமிட்ட தாக்குதல்கள்.

vi வல்லுறவு, பாலியல் அடிமைத்தனம், வலுக்கட்டாய விபச்சாரம், பிரிவு 7 பத்தி 2 (F)இல் குறிப்பிடப்பட்டுள்ளபடியான வலுக்கட்டாய கர்ப்பம், வலுக்கட்டாய கருத்தடை அல்லது பிற வகையான பாலியல் வன் கொடுமைகள் ஆகியவையும் ஜெனிவா ஒப் பந்தத்திற்கு எதிரானவை ஆகும்.

எனவே, இலங்கையில் நடைபெற்ற போரை சர்வதேச அளவிலானது என்று கருதினாலும், உள்நாட்டுப் போர் என்று கருதினாலும் இலங்கை அரசு புரிந்துள்ள போர்க் குற்றங்களை நாம் தெளிவாகக் கண்டுள்ளோம்.

**மானுடத்திற்கு எதிரான குற்றங்கள்**

முதலாவதாகவும் (வலுக்கட்டாயமாக காணாமல் அடித்தல்) மூன்றாவதும் (இடம் பெயர் முகாம்களில் போரின்போதும் அதற்குப் பிறகும் நடைபெற்ற மீறல்கள்) குறிப்பிடப்பட்டுள்ள செயல்களானது, ரோம் சட்டப் பிரிவு 7இல் கொண்டுள்ளபடி

www.tamilarangam.net

தெளிவாக மானுடத்திற்கு எதிரான குற்றங்களாகும். அதிலும் குறிப்பாக கீழ்க்காணும் பிரிவுகளின்படி :

கீழ்க்காணும் ஏதேனும் செயல்கள், ஒரு பரவலான அல்லது திட்டமிட்டத் தாக்குதலின் பகுதியாக, ஒரு குறிப்பிட்ட மக்களின் மீது, தெரிந்தே நடத்தப்படுமாயின் –

a. கொலை

b. படுகொலை

d. வெளியேற்றுதல் அல்லது மக்களை கட்டாயப்படுத்தி இடம் மாற்றுதல்

e. உலகளாவிய சட்டங்களில் கூறப்பட்டுள்ள அடிப்படைச் சட்ட திட்டங்களை மீறி சிறை வைத்தல் அல்லது நடமாடத் தடை விதித்தல்

f. துன்புறுத்தல்

வல்லுறவு, பாலியல் அடிமைத்தனம், வலுக்கட்டாய விபச்சாரம், பிரிவு 7 பத்தி 2 (F) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடியான வலுக்கட்டாய கர்ப்பம், வலுக்கட்டாய கருத்தடை அல்லது பிற வகையான பாலியல் வன்கொடுமைகள்.

h. ஒரு குறிப்பிட்ட குழுவினர் மீது அல்லது பத்தி மூன்றில் விளக்கப்பட்டுள்ளபடியான அரசியல், மரபின, இன, பண்பாட்டு, மத, பாலியல் அல்லது அனைத்துலகச் சட்டத்தின்படி அனுமதிக்க முடியாத, உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற அடிப்படைகளில் உள்ள ஒரு கூட்டத்தினர் மீது நடத்தப்படும் வன்கொடுமைகள்.

i. வலுக்கட்டாயமாக காணாமல் அடித்தல்.

k. பெரும் துன்பத்தையோ அல்லது பெரும் உடல் காயத்தையோ உளவியல் அல்லது உடல் ஆரோக்கியத்திற்கு பாதிப்போ ஏற்படுத்தக் கூடிய இதையொத்த பிற மனிதத்தன்மையற்ற செயல்கள்.

**இனப்படுகொலை எனும் குற்றத்தைச் செய்திருப்பதற்கான சாத்தியங்கள்**

இனப்படுகொலை குற்றச்சாட்டை விசாரிக்க தீர்ப்பாயத்திடம் கோரிக்கை வைக்கப்படவில்லை எனினும், வாக்குமூலங்கள் அளித்த சில நிறுவனங்களும் தனிநபர்களும் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் மீது இனப்படுகொலை நடந்தது அல்லது நடந்திருக்கலாம் என்பதை அங்கீகரிக்குமாறு கூறினர். போர்க் குற்றம் மற்றும் மானுடத்திற்கு எதிரான குற்றத்துடன் இனப்படுகொலைக் குற்றச் சாட்டையும் இணைக்கும் அளவிலான ஆதாரங்கள் தீர்ப்பாயத்தின் முன்



வைக்கப்படவில்லை. சில உண்மைகள் அவை இனப்படுகொலைச் செயல்களாக இருக்கக் கூடும் என்ற அளவில் முழுவதுமாக ஆராயப்பட வேண்டும். அப்படியான உண்மைகளில் கீழ்க் காணுபவையும் அடங்கும் :

- ''ஒரு குழுவினர் தொடர்ந்து வாழ்வதற்கான அடிப்படைகளை'' அழிக்க என்று லெம்கின் கூறியது போல் (இங்கு தமிழ்க் குழுவினர்) தமிழ்ச் சமூகத்தின் முக்கிய உறுப்பினர்களுக்கு எதிராக (ஊடகவியலாளர்கள், மருத்துவர்கள், அரசியல்வாதிகள்) இலங்கை ஆயுதப்படையினரும், அரசின் ஆதரவோடும் வழி காட்டுதலோடும் செயல் பட்ட துணை இராணுவக் குழுவினரும் மேற்கொண்ட, தனிநபர்களை வலுக்கட்டாயமாக 'காணாமல் போக'ச் செய்த முறை.

- இடம் பெயர் முகாம்களில் உள்ள தமிழ் மக்களின் அவல நிலை நீடிப்பது, சுட்டு கொல்லப்படுவது தொடர்வது, திட்டமிட்ட வல்லுறவு, வலுகட்டாயமாக 'காணாமல் போகச் செய்தல்', நாட்டில் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் இடங்களில் பரவலாக அழிக்கப்பட்ட கட்டமைப்புகள். தமிழ் மக்கள் தொடர்ந்து வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளான உணவு, மருந்து போன்ற வற்றிற்கு பற்றாக்குறை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை தற்போதைய நிலை என்றாலும், அவற்றை குற்றச்சாட்டுகளில் இணைக்கப் போதுமான ஆதாரங்கள் எங்களுக்கு கிடைக்கவில்லை. எனினும், இனப்படு கொலை நடந்திருக்கலாம் என்ற நோக்கில் தொடர்ந்த விசாரணையை மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தைத் தீர்ப்பாயம் ஏற்றுக் கொள்கிறது.

**மனித உரிமைச் சட்டங்களின் கீழ் இருக்க எந்த ஒரு மனிதனுக்கும் உள்ள உரிமை**

''பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போர்'' என்று சொல்லப்படுகிற விஷயமானது, இத்தகைய போர்களில் செய்யப்படும் எந்த ஒரு செயலும், மிக ஆபத்தான ஓர் எதிரியை அழிக்கவல்ல சிறந்த வழியாக கருதப்பட்டு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன் வைக்கிறது. இந்த புதிய பாதுகாப்பு முன் மாதிரியானது, மக்களில் 'பயங்கரவாதிகள்' என்று முத்திரைக் குத்தப்பட்டவர்களுக்கு எதிராக நடத்தப்படும் அனைத்துவித மனித உரிமை மீறல்களையும் நியாயப்படுத்துகிறது. 'பயங்கரவாதிகள்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் புரிந்த குற்றங்களை கணக்கில் எடுத்துக் கொண்டாலும்கூட, அவர்களும் மனித உரிமைச் சட்டத்தின் பாதுகாப்பின் கீழ் வருவார்கள் என்பது இத்தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு அடிப்படையான கருத்தாகும். பாதிக்கப்பட்டவர்களின் எந்த ஒரு குற்றமும், இத்தீர்ப்பாயத்தினால் உறுதி செய்யப்பட்ட எந்த ஒரு போர்க் குற்றத்தையும் அல்லது மானுடத்திற்கு எதிரான குற்றத்தையும் நியாயப்படுத்த முடியாது.

இதனை முக்கியத்துவப்படுத்துவதன் காரணம் என்னவெனில், இந்த புதிய பாதுகாப்பு முன் மாதிரிக்குள், 'பயங்கரவாதிகள்' அல்லது வேறு ஏதேனும் தீவிர பெயரில் முத்திரை குத்தப்பட்ட மக்கள், ஒட்டு மொத்த மனித இனத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டு, அதனால் மனித உரிமைச் சட்டத்தின்படி உறுதி செய்யப்பட்ட எந்த பாதுகாப்பையும் அனுபவிக்க முடியாது. இந்த கருத்தானது, மனித உரிமைச் சட்டங்களின் இருப்பையே மறுப்பதாகும்.

**'அமைதிக்கு எதிரான குற்றங்கள்' செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற குற்றச்சாட்டு**

தீர்ப்பாயத்திடம் இறுதியாக அளிக்கப்பட்ட குற்றச்சாட்டு – 'அமைதிக்கு எதிரான குற்றங்கள்' இலங்கை அரசும் அதனுடன் வேறு சில அந்நிய சக்திகளும் இணைந்து ஒரு வெறுப்புக் கொண்ட போரையே நடத்தின என்று குற்றம் சாட்டப்படுகிறது. நூரெம்பெர்க் தீர்ப்பாயத்தில் அமைதிக்கு எதிரான குற்றங்கள் விளக்கப் பட்டுள்ளன : (1) வெறுப்பின் மீது கட்டமைக்கப்பட்ட ஒரு போரையோ அல்லது சர்வதேச ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் அல்லது வாக்குறுதிகள் ஆகியவற்றை மீறிய ஒரு போரையோ நடத்த திட்டமிட்டு, ஆயத்தமாகி, தொடங்கி நடத்துவது (2) அப்படியான செயல்களை நடத்தி முடிப்பதற்கான ஒரு பொதுத் திட்டத்திலோ, சதித் திட்டத்திலோ பங்கேற்பது.

இந்த குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்வதில் தீர்ப்பாயத்திற்கு உள்ள சிக்கலானது, தீர்ப்பாயத்தின் முன் இக்குற்றச்சாட்டை உறுதிப்படுத்த வைக்கப்பட்ட சாட்சியங்களால் மட்டுமல்ல, கூடுதலாகவும் முக்கியமாகவும், இக்குற்றச்சாட்டை மனித உரிமைச் சட்டங்களின் பகுதியாக ஏற்றுக்கொள் வதால் ஏற்படக்கூடிய விளைவுகள்.



அமைதிக்கு எதிரான குற்றம் என்பது, அமைதி நிலவும் சூழலில், இரு தரப்பினரில் ஒரு தரப்பினர் வன்முறையான ஒரு போரைத் தொடங்குவதன் மூலம் இந்த அமைதிச் சூழலை உடைப்பது.

இருப்பினும், மனித இனம் அவலத்தை எதிர்நோக்கிய பெரும் பாலான ஆயுத மோதல்களில் ஒரு குழப்பமான மற்றும் சிக்கலான நோக்கிலிருந்து சூழலை ஆராய முடியும். ஒரு போரில் முதன் முதலில் தாக்குதலைத் தொடங்கியவர் யாரென முடிவு செய்வது கடினமானது மட்டுமல்ல, ஒரு சார்பானதாகவும் ஆகிவிடுகிறது. ஒடுக்கு முறையானது பல ஆண்டுகள் சேர்ந்து கொண்டே போய் ஓர் இக்கட்டான நிலையில் வினையாற்றும்போது அது ஒரு வன்முறைப் போரின் தொடக்கச் செயலாகி விடுகிறது. இதுதான் இலங்கையில் பல ஆண்டுகள் நடந்த போரின் நிலையும். எந்தப் பக்கம் நின்று இந்த மோதல் ஆராயப்படுகிறது என்பதைப் பொருத்து, யார் 'அமைதிக்கு எதிரான குற்றத்தைப்' புரிந்தனர் என்பது முடிவாகும். அதனால்தான் இக்குற்றத்தைப் பொருத்த வரையில் தீர்ப்பாயம் குறிப்பான குற்றச்சாட்டுகளை ஏற்கவில்லை.

இருந்தபோதும், கிடைத்த ஆதாரங்கள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில் சர்வதேச சமூகத்தின் பொறுப்பை உணரும் அதே வேளையில், தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்களைத் தடுக்க, எவ்விதக் காத்திரமான முன்னெடுப்புகளையும் அது மேற்கொள்ளவில்லை என்பதையும், தொடர்ந்து போர்க் குற்றங்கள் மற்றும் மானுடத்திற்கு எதிரான குற்றங்களையும் அது புறந்தள்ளி விட்டது என்பதையும் உணர்கிறது.

போரின் இறுதிக் காலங்களில் நடைபெற்ற மனித உரிமை மீறல் களுக்கு நீதி பெற்றுத் தர வேண்டிய தார்மீக பொறுப்பை நிறைவேற்றாமல் விட்ட அய்க்கிய நாடுகள் அவையின் உறுப்பு நாடுகளுக்கு, இத்தீர்ப்பாயம் அந்த பொறுப்பினை வலியுறுத்துகிறது. தொடர்ந்த வேண்டுகோள்களுக்குப் பிறகும், தமிழர்கள் அனுபவித்த மோச மான சூழல்களுக்குப் பிறகும், சில உறுப்பு நாடுகளின் அழுத்தம் காரணமாக அய்.நா. மனித உரிமைகள் ஆணையமும், அய்.நா. பாதுகாப்பு ஆணையமும் நடந்த கொடுமை களை விசாரிக்க – ஒரு சுதந்திரமான ஆணையத்தை அமைக்கத் தவறி விட்டன.

2002இன் போர் நிறுத்த ஒப்பந்தத்தை அய்ரோப்பிய ஒன்றியம் வலுவிழக்கச் செய்ததையும் இத்தீர்ப்பாயம் முன்னிறுத்துகிறது. ஓர் அமைதி முயற்சி முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதையும் அதன் விளைவுகளையும் நன்கு அறிந்த நிலையில் – அமெரிக்கா மற்றும்

www.tamilarangam.net

பிரிட்டனின் அழுத்தத்தின் காரணமாக, தமிழீழ விடுதலைப் புலிகளை உள்ளடக்கிய தமிழ்ப் போராட்டக் குழுவினைப் பயங்கரவாதிகள் இயக்கமெனப் பட்டியலிட அய்ரோப்பிய ஒன்றியம் 2006இல் முடி வெடுத்தது. இந்த முடிவானது, இலங்கை அரசு போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறித்து, பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற் கொள்ள அனுமதித்தது. அதன் விளைவாகவே, மேற் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதமான மீறல்களும் நடைபெற்றன. அத்தோடு தமிழர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட ஒரு போரில், இலங்கை அரசாங்கம் அதன் ஆயுதப் படைகள் ஆகியவற்றின் நடத்தைகளுக்கு ஓர் அரசியல் அங்கீகாரம் அளிக்கப்பட்டதன் முழு பொறுப்பும் 'பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போரை' நடத்தும் அமெரிக்கா தலைமையிலான நாடுகளையே சாரும் எனத் தீர்ப்பாயம் சுட்டிக்காட்டுகிறது.

அதோடு, இலங்கை அரசிற்கு ஆயு தங்கள் வழங்கியதில் பல நாடுகளுக்கு நேரடிப் பொறுப்பு இருப்பதையும் இத்தீர்ப்பாயம் சுட்டிக்காட்டுகிறது. இதில் சில ஆயுதங்கள் 'சில மரபு ஆயுதங்கள் குறித்த ஒப்பந்தம்' போன்ற பல ஒப்பந்தங்களினால் தடை செய்யப்பட்டுள்ளன. அத்தோடு இதில் சில நாடுகள், போர் நிறுத்தக் காலகட்டத்தில் இலங்கை இராணுவப் படையினருக்கு பயிற்சியும் அளித்திருக்கின்றன.

●



# பரிந்துரைகள்

பன்னிரெண்டாயிரத்திற்கும் அதிகமான அரசியல் கைதிகளின் பாதுகாப்பையும் கவுரவத்தையும் உறுதி செய்து, உலகளாவிய நடைமுறைகளின்படி, அவர்களை அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தினர் சந்திக்கவும், சட்டப்பூர்வமாகத் தங்களை அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தவும் அனுமதிக்க வேண்டும். இலங்கைச் சிறைகளில் தற்பொழுது தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 ஆயிரம் அரசியல் கைதிகள் நேர்மையான மற்றும் வெளிப்படையான விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

**இலங்கை அரசுக்கு :**

- 2002 போர் நிறுத்த ஒப்பந்தம் முறிந்த பிறகு போரின் இறுதிக் கட்டங்களில் மோதலில் ஈடுபட்ட இரு தரப்பிலும் புரிந்த மானுடத்திற்கு எதிரான குற்றங்களையும், போர்க் குற்றங்களையும் விசாரிக்க, உடனடியாகச் சூழலின் அவசரத்தைக் கருத்தில் கொண்டு, சுதந்திரமான அதிகாரமுடைய 'உண்மை மற்றும் நீதிக்கான ஆணையம்' ஒன்றை அமைத்து, போர்க் குற்றங்கள் மற்றும் மானுடத்திற்கு எதிரான குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களுக்கு தகுந்த தண்டனை விதிப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- உடனடியாக அவசர நிலையை விலக்கிக் கொள்வதன் மூலமும், 1979இன் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை திரும்பப் பெற்றுக் கொள்வதன் மூலமும் – தமிழ் மக்களின் அடிப்படை சுதந்திரத்தையும் அரசியல் உரிமைகளையும் மீட்டெடுக்க வேண்டும்.

www.tamilarangam.net

● 12,000–க்கும் அதிகமான அரசியல் கைதிகளின் பாதுகாப்பையும் கவுரவத்தையும் உறுதி செய்து, உலக நடைமுறைகளின்படி, அவர்களை அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தினர் சந்திக்கவும் சட்டப் பூர்வமாகத் தங்களை அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தவும் அனுமதிக்க வேண்டும்.

● உள்ளூர் மற்றும் பன்னாட்டு ஊடகவியலாளர்கள், மனித உரிமைக் காப்பாளர்கள் ஆகியோரின் பாதுகாப்பு மற்றும் சுதந்திரமாகச் செயல்படும் தன்மையை உறுதிப்படுத்துவதோடு, அவர்களின் சட்டப்பூர்வமான மனித உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

● அனைத்து துணை இராணுவக் குழுக்களையும் கலைத்துவிட்டு, தமிழ்ப் பகுதிகளில் இராணுவப் படைகளின் இருப்பைக் குறைக்க வேண்டும்.

● வடகிழக்கின் நிர்வாகம் மற்றும் மேலாண்மையில் தமிழர்களுக்குச் செயல்படத்தக்க சட்டப்பூர்வமான பங் கெடுப்பினை வழங்கக் கூடிய அரசியல் அதிகாரப் பங்கீட்டுத் தீர்வை நடைமுறைப்படுத்தி, சம குடியுரிமைக்கு அவர்களுக்கு இருக்கும் உரிமைகளை ஏற்றுக் கொண்டு, அனைத்து நிலைகளிலும் அவர்கள் பங்கெடுக்கவும் பிரதிநிதித்துவப்படுத்தவும் வாய்ப்பு வழங்கி, மே 2010இல் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும், அமைதியாகவும் நடைபெற உறுதிப்படுத்த வேண்டும்.

● அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்படுத்தக்கூடிய 'ரோம்' ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**முகாம்களில் உள்ள தற்போதைய நிலைமைகள் மற்றும் உள் நாட்டில் இடம் பெயர்ந்தோரை பொருத்த அளவில் 'நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்' கீழ்க்காணுபவற்றை பரிந்துரைக்கிறது :**

● அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமைக் காப்பாளர்கள் மற்றும் ஊடகங்கள் போன்ற மனித நேய அமைப்புகள் – சுதந்திரமாகவும் தடையின்றியும் முகாம்களுக்குச் சென்று வர அனுமதிக்க வேண்டும்.

● முகாம்களை இராணுவத்திடமிருந்து சிவில் நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் முழு ஒத்துழைப்புடனும் பன்னாட்டு நிறுவனங்களின் கண்காணிப்பில்



சிவில் அதிகாரிகளின் நிர் வாகத்தில், தமிழர்கள் அவர்களின் சொந்த வாழ்விடங்களில் மீள் குடியமர்த்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

● அய்.நா.வின் ''உள்நாட்டில் இடப்பெயர்விற்கான வழிகாட்டு நெறிமுறைகள்'' போன்றவற்றில் கூறப்பட்டுள்ள தரத்தில் – பாது காப்பாக திரும்பவும், திரும்புபவர்கள், புனர்வாழ்வு மற்றும் மறு கட்டமைப்புச் செயல்களைச் சுதந்திரமான பன்னாட்டு கண் காணிப்பிற்கு அனுமதிக்கவும் வேண்டும்.

● பாதிப்பு குறித்த மதிப்பீடு, மனித ஆய்வுகள் ஆகியவற்றை மேற் கொண்டு, தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்துச் சரியான மதிப்பீட்டிற்குப் பின் அதற்கான இழப்பீட்டினை நிர்ணயிக்க, ஒரு சரியான நடைமுறையை உருவாக்க வேண்டும்.

● பெண்கள், குழந்தைகள், பிரிந்துவிட்ட குடும்பங்கள், அடிப்படைச் சேவைகள் சென்றடைதல், போருக்குப் பின்னான புனர் வாழ்வு, கல்வி மற்றும் உடல் நலன் மற்றும் அதிர்ச்சிக்குப் பின்னான மன அழுத்தம் மற்றும் மனப்பிறழ்வுக்கான சிகிச்சை உட்பட்ட உளவியல் நலன் ஆகியவற்றைக் குறிப் பாக கவனிக்க வேண்டும்.

**உலக சமூகம், நிதியளிக்கும் அரசுகள் மற்றும் அய்க்கிய நாடுகள் அவை ஆகியவற்றிற்கான பரிந்துரைகள் :**

மேற்கூறப்பட்டவர்கள் கீழ்க்காணுபவற்றை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என தீர்ப்பாயம் கோருகிறது :

● மோதலில் ஈடுபட்ட அனைத்துத் தரப்பினரும் புரிந்த மனித உரிமை மீறல்கள், மனித உரிமைச் சட்ட மீறல்கள் மற்றும் போர்க் குற் றங்கள் குறித்து விசாரித்து, அதற்குக் காரணமானவர்களை அடையாளம் காண இலங்கைக்கென அய்.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

போர் நிறுத்த ஒப்பந்தச் சீர்குலைவுக்கும் அதனைத் தொடர்ந்த போர்க் குற்றங்கள் மற்றும் மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றிற்கும் உலக சமூகம் எந்த அளவுக்குப் பொறுப் பானது என்பதையும், போர் நிறுத்தக் காலத்தில் இலங்கை அரசுக்கு அவை ஆயுதங்கள் வழங்கியமை குறித்தும் விசாரிக்க – பொறுப்பான, புகழ் பெற்ற தனி நபர்களைக் கொண்ட ஒரு சுதந்திரமான குழுவை அமைப்பதற்குத் துணை நிற்க வேண்டும்.

www.tamilarangam.net

தமிழ் மக்களின் மனித உரிமைகளின் நிலை குறித்தும், தமிழர் புனர்வாழ்வு மற்றும் மறு குடியமர்த்தும் பணிகள் குறித்தும், அடிப்படை உரிமைகள், சுதந்திரம் மற்றும் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை மீட்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்தும் சுதந்திரமாகக் கண்காணிக்க, அய்.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் செயல் அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டும்.

அமைதி மற்றும் போர் நிறுத்த நடவடிக்கைகளையும், கண்ணி வெடி அகற்றல், புனரமைப்பு, தமிழர்களின் விருப்பம் மற்றும் போருக்குப் பின்னான விருப்பத்திற்கேற்ற மறு கட்டமைப்பு ஆகியவற்றிற்கு துணையாக நிதியளிக்கும் நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க, பன்னாட்டு மற்றும் கூட்டு நடவடிக்கைப் படை ஒன்றை உருவாக்க வேண்டும்.

தமிழ் மக்களின் நிலைத்த வாழ்விற்கும், அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்குமானவற்றை அளிக்கவும், சிங்களர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே பண்பாட்டுப் பகிர்வு மற்றும் உரையாடல்களுக்கும் வழிவகுக்கக்கூடிய நம்பிக்கையூட்டும் நிகழ்வுகளுக்கு ஆதரவு அளிக்கவும் வேண்டும்.

சுனாமி நிவாரணம் மற்றும் பேரவலத்திற்குப் பின்னான மறு கட்டமைப்புக்காக வழங்கப்பட்ட பன்னாட்டு அவசரகால மற்றும் வளர்ச்சி நிதிகளின் இறுதிப் பயன்பாடு மற்றும் சரியான படியான மறு பகிர்வு குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2010இல் நடக்க இருக்கிற நாடாளுமன்றத் தேர்தலை கண்காணிக்க, ஒரு சிறப்புப் பன்னாட்டுத் தேர்தல் கண்காணிப்புக் குழுவினை நியமிக்க வேண்டும்.

இலங்கைச் சிறைகளில் தற்பொழுது தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 ஆயிரம் அரசியல் கைதிகள் நேர்மையான மற்றும் வெளிப்படையான விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும்.

●



# இறுதிக் குறிப்புகள்

தங்களுடைய வாழ்வை மிக ஆழமாகவும் நிரந்தரமாகவும் பாதித்துவிட்ட உண்மைகளை வாக்குமூலங்களாக அளிக்கத் துணிச்சலுடன் முன் வந்த நேரடி சாட்சிகளின் அடிப்படைப் பங்களிப்பை அங்கீகரிக்காமல், நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் தனது பணியை முடிக்க இயலாது. எண்ணற்ற அளவில் பாதிக்கப்பட்ட மக்களின் சரியான பிரதிநிதிகள் இவர்களே. அவர்களின் துன்பத்தை முழுமையாக விவரிக்கவே இயலாது. அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் அங்கீகரிப்பதுமே நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் இருப்பிற்கும் செயல்பாட்டிற்குமான காரணங்கள்.

தங்கள் நாட்டில் நடைபெற்ற கொடுமைகளை நேரடியாகக் கண்டவர்கள், தற்போதைய சூழலில், அவர்களது சுதந்திரம் மற்றும் உயிர் மீது நேரடியாகவோ, அவர்களுடைய குடும்பத்தினர் மீதான தாக்குதல்கள் மூலமாகவோ –அவர்களது உரிமைகள் மேலும் பறிக்கப்படலாம் என்பதை நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் நன்கு அறிந்திருக்கிறது.

எனவே, எங்களிடம் வாக்குமூலங்கள் அளித்தவர்களுக்கோ, அவர்களின் குடும்பத்தினருக்கோ ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால், அதற்கு எங்கள் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளும், குற்றம் புரிந்தவர்களுமே முழுப் பொறுப்பு என நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் அறிவிக்கிறது. தீர்ப்பாயத்தின் உண்மை அறியும் முயற்சிக்கு துணிச்சலுடன் தங்கள் பங்களிப்பை நல்கிய சாட்சிகளின் பாதுகாப்பு குறித்துச் சீரிய கவனம் செலுத்துவதை எங்கள் முக்கியக் கடமையாக

www.tamilarangam.net

ஏற்கிறோம். அவர்களில் யாருக்கேனும் ஏதேனும் நேர்ந்தால், அதற்கு இலங்கை அரசே பொறுப்பென நாங்கள் உறுதிபடக் கூறுகிறோம்.

எங்கள் பணிக்கும் திட்டங்களுக்கும் பங்களிப்பை நல்கியதற்காக, சாட்சிகள் துன்பப்படும் எந்த விளைவையும் கண்காணிக்கவும், உடனடி நடவடிக்கை எடுக்கவும் நேரடியாகப் பணியாற்றத் தயாராக இருக்கிறோம் என்றும் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் உறுதி கூறுகிறது.

●



# நிகழ்ச்சி நிரல்

இலங்கையின் மீதான மக்கள் தீர்ப்பாயம் : 14 – 16 சனவரி, 2010

**முதல் நாள் : 14 சனவரி 2010**

விசாரணைக்கு உட்படுத்தப்பட உள்ள குற்றங்களின் தன்மை : பகுதி 1

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிக் கட்டங்களும் அதன் பின் விளைவுகளும் : மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள்

அமர்வு ஒன்று : காலை 9 மணி முதல் 11 மணி வரை (பொது அமர்வு)

1. திரு. ராஜீவ் சிறீதரன் மற்றும் திரு. ஜனனி ஜனநாயகம் 'இனப் படுகொலைக்கு எதிரான தமிழர்கள்'

போரின் இறுதிக் கட்டங்களில் எடுக்கப்பட்ட 'பாதுகாப்பு வலையத்'தின் செயற்கைக்கோள் புகைப்படங்களை அடிப்படையாகக் கொண்ட போர்க் குற்றங்கள் பற்றிய சான்றுகள்

2. முனைவர் பால் நியூமேன் (தென்னாசியாவின் அக்கறை கொண்ட பொது மக்களின் அமைப்பு)

போருக்குப் பின்னான சூழலில் அகதிகள் மற்றும் மனித உரிமைகள் குறித்த சுருக்கமான பார்வை.

போரின் இறுதிக் கட்டங்களில் பொது மக்கள் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சுக்கள் பற்றிய ஒளிப்படக் காட்சிகள் திரையிடல்.

அமர்வு 2 : காலை 11.15 மணி முதல் மதியம் 1.30 மணி வரை (உள்ளக அமர்வுகள்)

www.tamilarangam.net

3. நிபுணர் சாட்சியம்

கையில் உள்ள ஆதாரங்களின் அடிப்படையில் மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள் குறித்த ஒரு சுருக்கமான விளக்கம்.

4. நேரடி சாட்சியான நிபுணரின் வாக்குமூலம்

மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள். போரில் ஓர் ஆயுதமாக உணவு. போரில் ஓர் ஆயுதமாக மருந்து. போரில் ஓர் ஆயுதமாக வல்லுறவு. பொது மக்களை கொல்லுதல் மற்றும் பொது மக்களின் கட்டடங்களை இடித்தல் போன்றவை.

5. நேரடி சாட்சியின் வாக்குமூலம்

பொது மக்களை கொல்லுதல் மற்றும் பொது மருத்துவ மனைகள், பள்ளிகள், வீடுகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களை அழித்தல். பாதுகாப்பு வலையம் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் குண்டு தாக்குதல்.

அமர்வு 3 : மாலை 3 மணி முதல் மாலை 6 மணி வரை (உள்ளக அமர்வுகள்)

6. நேரடி சாட்சியின் வாக்குமூலம்

மருத்துவமனைகள் மீது தாக்குதல்கள். போரில் ஆயுதமாக உணவும் மருந்தும்.

7. நேரடி சாட்சியின் வாக்குமூலம்

பொது மக்களை கொல்லுதல் மற்றும் பொது மருத்துவமனைகள், பள்ளிகள், வீடுகள் மற்றும் வழி பாட்டுத்தலங்களை அழித்தல், பாதுகாப்பு வலை யம் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் குண்டு வீசித் தாக்குதல்.

8. நேரடி சாட்சி

தடுப்பு முகாம்கள், மனித உரிமை மீறல்கள், வல்லுறவு மற்றும் கடத்தல்கள் பற்றிய ஒரு நேரடி சாட்சியின் வாக்குமூலம்.

9. நேரடி சாட்சி

தடுப்பு முகாம்கள், மனித உரிமை மீறல்கள், வல்லுறவு மற்றும் கடத்தல்கள் பற்றிய ஒரு நேரடி சாட்சியின் வாக்குமூலம்.

மாலை 6.00 மணி : முதல் நாளின் இறுதி

**இரண்டாம் நாள் : 15 சனவரி 2010**

அமர்வு 4 : காலை 8 மணி முதல் காலை 9.30 மணி வரை (உள்ளக அமர்வு)



10. நிபுணர் சாட்சியம்

ஊடகங்களின் மீதான ஒடுக்குமுறைகள். ஊடகவியலாளர்கள் கொலை. சட்டத்திற்குப் புறம்பான கொலைகள்.

11. நேரடி சாட்சியின் வாக்குமூலம்

ஓர் ஊடகவியலாளர் – துன்புறுத்தலுக்குள்ளானவர்

2002 போர் நிறுத்த ஒப்பந்தத்தின் முறிவுக்குக் காரணமான உள்ளூர் மற்றும் உலகளாவிய காரணங்கள் – அமைதிக்கு எதிரான குற்றங்கள்

அமர்வு 1 : காலை 10.15 மணி முதல் மதியம் 12.15 மணி வரை (பொது அமர்வு)

1. கமாடோர் ஆர்.எஸ். வாசன், இந்தியா (தலைவர், திட்ட மிடுதல் மற்றும் பாதுகாப்புக் கல்வி மய்யம், சென்னை மற்றும் இலங்கைக் கான இந்திய அமைதிப் படையின் முன்னாள் கடற்படை அதிகாரி)

2. பிரிகேடியர் ஜெனரல் அல்ப் ஹென்ரிக்சன், ஸ்வீடன் (2002 இலங்கை போர் நிறுத்த ஒப்பந்தக் கண்காணிப்புக் குழுவின் தலை வர்)

2002 போர் நிறுத்த ஒப்பந்தத்தில் என்ன நடந்தது

3. பேரா. பீட்டர் ஷால்க், ஸ்வீடன்

2002 போர் நிறுத்த ஒப்பந்தத்தில் அய்ரோப்பிய ஒன்றியத்தின் பங்கு

சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் மற்றும் உயிரற்ற உடல்களை அவமரியாதை செய்தல் தொடர்பான ஒளிப்படக் காட்சிகள்

அமர்வு 2 : மதியம் 12.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை (உள்ளக அமர்வு)

1. இரண்டு நிபுணத்துவ நேரடி சாட்சிகள்

சமாதான காலத்தில் நடந்த நலவாழ்வு, மருத்துவம், குழந்தைகள் நலம், கண்ணி வெடி அகற்றல் மற்றும் பிற மனித நேயப் பணிகள் குறித்த கணிப்பு. குறிப்பாக 2004 சுனாமிக்குப் பிறகு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் நடந்த பணிகள் மற்றும் இப்பணிகள் குறித்துப் பன்னாட்டு சமூகத்தின் எதிர்வினை.

அமர்வு 3 : மாலை 3 மணி முதல் மாலை 5 மணி வரை (இறுதி அமர்வு – உள்ளக அமர்வு)

1. நிபுணர் சாட்சியம் – அயர்லாந்து

www.tamilarangam.net

*இலங்கையில் நடந்த அமைதிக்கான முன்னெடுப்புகளில் அயர்லாந்தின் நேர்மறையான பங்களிப்புகள்*

*2. இரண்டு நிபுணர் சாட்சிகள்*

*போர் நிறுத்த ஒப்பந்த முறிவுக்குக் காரணமான உலகளாவிய காரணங்கள் மற்றும் இராணுவத் தீர்வுக்கான முன்னெடுப்புகள் (அமைதிக்கு எதிரான குற்றங்கள்)*

*மாலை 5 மணி : விசாரணை முடிவு*

*மூன்றாம் நாள் : 16 சனவரி 2010*

*பொது அமர்வு : விசாரணை முடிவுகள் சமர்ப்பித்தல் – மாலை 2 மணி முதல் மாலை 4 மணி வரை*

*மாலை 2 மணி முதல் மாலை 3 மணி வரை*

*அமர்வுத் தலைவர் : பேரா. பிரான்சுவா ஹுதார்த்*

*விசாரணை முடிவுகளை சமர்ப்பித்தல்*

*தலைவரும் விசாரணைக் குழுவினரும் அரங்கிலிருந்து வெளியேறல்.*

*இறுதி அமர்வு : மாலை 3.15 மணி முதல் மாலை 4 மணி வரை*

*இலங்கையில் அமைதிக்கான அய்ரிஷ் கருத்து மன்றம் நடத்திய ஒரு திறந்த விவாதம்.*

●



# “அநீதியின் வரலாற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்”

## பேட்டி: ராஜீவ் சிறீதரன்

***‘இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள்’ (Tamils Against Genocide) என்ற அமைப்பு, அமெரிக்காவை அடிப்படை இயங்கு தளமாகக் கொண்டுள்ள ஒரு மனித உரிமை அமைப்பு. ‘இனப்படுகொலை, மானுடத்திற்கு எதிரான குற்றங்கள், துன்புறுத்தல்கள் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான படுகொலைகள் உள்ளிட்ட போர்க் குற்றங்களை, இலங்கையில் உள்ள தமிழர்கள் மீது நடத்திய, தற்பொழுது இலங்கை அரசில் பணியாற்றும் அமெரிக்கக் குடியுரிமை பெற்ற மூவரின் மீதும் – அமெரிக்க மற்றும் பன்னாட்டுச் சட்டங்களின்படி விசாரணை நடத்தி வைப்பதை’ தனது முதன்மை நோக்கமாக வெளிப்படையாக அறிவித்து விட்டு இயங்கும் ஓர் அமைப்பு இது (அவர்கள் குறிப்பிடும் மூவர், கோத்தபாய ராஜபக்சே, பசில் ராஜபக்சே மற்றும் சரத் பொன்சேகா என புரிந்து கொள்ளப்படுகிறது).***

***தனது பணிகளின் தொடர்ச்சியாக, டப்ளினில் நடைபெற்ற இலங்கைக்கான மக்கள் தீர்ப்பாயத்தில், இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பான வாதங்களையும், நேரடி சாட்சிகள் உட்பட, அதற்கான சான்றுகளையும் இவ்வமைப்பு திரட்டி அளித்தது. ‘இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள்’ அமைப்பின் சார்பாக – அதன் பொறுப்பாளர்களில் ஒருவரும், அமெரிக்காவின் முன்னணி செயற்கைக் கோள் படச் சட்ட ஆய்வாளருமான ராஜீவ் சிறீதரன் – தங்கள் அமைப்பின் பணிகள் குறித்தும், எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் ‘தலித் முரசு’க்கு அளித்த பேட்டி.***

■ பேட்டி : பூங்குழலி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*'இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள்' என்ற அமைப்பு குறித்தும், அது ஆற்றி வரும் பணிகள் குறித்தும் சொல்ல முடியுமா?*

'இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள்' அமைப்பு அமெரிக்காவில் இயங்கி வருகிறது. இலங்கையின் வடக்கு – கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்களை குறிவைத்து இலங்கை அரசு புரிந்த போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகள் உள்ளிட்ட பன்னாட்டுச் சட்ட மீறல்களுக்குப் போதுமான மற்றும் நடைமுறைப்படுத்தக்கூடிய வகையிலான சட்டத் தீர்வுகளை உருவாக்குவதை, அது நோக்கமாகக் கொண்டிருக்கிறது. பொதுவாக, சனவரி 2009 தொடங்கி மே 2009 வரையிலான காலகட்டத்தில் குறிப்பாக வன்னியில், இலங்கை இராணுவத்தின் அட்டூழியங்கள், பன்னாட்டு மனித உரிமை வரையறைகளை மீறியது என்பதை ஏற்றுக் கொண்ட மற்றும் போருக்குப் பின்னான அல்லது இனப்படுகொலைக்குப் பின்னான தீர்வுத் திட்டங்களில் தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நீதியை ஒரு முக்கியக் கூறாகக் கருதி, ஆதரவளிக்கக் கூடிய அனைத்துத் தனி நபர்கள் மற்றும் அமைப்புகளுடனும் எங்களுடைய அமைப்பு இணைந்து பணியாற்றுகிறது.

இலங்கை அரசுக்கு எதிராகவும், இலங்கை அரசில் அதிகாரத்தில் இருந்து குற்றம் புரிந்த தனி நபர்களுக்கு எதிராகவும் போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை வழக்குகளை கட்டியெழுப்ப 'இனப்படு கொலைக்கு எதிரான தமிழர்கள்' அமைப்பு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, ப்ரூஸ் பெயின், பிரான்சிஸ்பாய்ல் போன்ற பன்னாட்டு வழக்குரைஞர்கள், தடயவியல் அறிஞர்கள் ஆகியோருடன் மின்னணு முறையில் பாதுகாக்கப்பட்ட சான்றுகளை (நிழற்படங்கள், ஒளிப்படங்கள், செயற்கைக்கோள் படங்கள், ஒலிப்பதிவுகள்) பயன்படுத்துவது குறித்துக் கலந்து ஆலோசித்தது. நாங்கள் புலம் பெயர்ந்த மக்களுடனும் இணைந்து பணியாற்றுகிறோம். அத்துடன், இனப்படுகொலைக்குப் பின் தப்பிப் பிழைத்து, இலங்கைக்கு உள்ளே பாதுகாப்பான இடங்களிலோ, முகாம்களுக்கு வெளியிலோ, இலங்கைக்கு வெளியிலோ பாதுகாப்பான இடங்களுக்குத் தப்பிச் சென்றிருக்கக்கூடிய இனப்படுகொலையின் நேரடி சாட்சிகளுடனும் பணியாற்றுகிறோம். இதன் மூலம் அனுமதிக்கப்பட்ட சான்றுகளை சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளோம்.

'இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்களின்' பார்வையில், போர்க் குற்றங்கள், மானுடத்திற்கு எதிரான குற்றங்கள், துன்புறுத்தல் மற்றும் தமிழர்கள் மீதான இனப்படுகொலை ஆகியவற்றிற்கான நீதி என்பது,



விடுதலைப் புலிகளுக்குப் பின்னான இலங்கை அரசியலில், எவ் வித சமரசத்திற்கும் இடம் கொடாத முன் நிபந்தனை ஆகும். பெரிய பன்னாட்டு மனித உரிமை அமைப்புகள் இதனைக் கையில் எடுக்கும் வரையில், பிற அமைப்புகளுடன் இணைந்து இந்தப் பணியை நாங்கள் தொடர இருக்கிறோம்.

*நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தை இதில் தலையிட வைப்பதும், விசாரணை நடத்த வைப்பதும் எப்படிச் சாத்தியப்பட்டது?*

இலங்கை ராணுவம் போர்க் குற்றங்களையும் மானுடத்திற்கு எதிரான குற்றங்களையும் புரிந்தது எனவும், தமிழ் இனப்படுகொலை நடந்திருக்கலாம் எனவும் தீர்ப்பு வழங்கிய இலங்கை மீதான பெட்ரண்ட் ரஸ்ஸல் மக்கள் தீர்ப்பாயத்தினை, ஜூட் பெர்னான்டோ தலைமையில் செயல்படும் 'இலங்கையில் அமைதிக்கான அயர்லாந்து கருத்து மன்றம்' ஏற்பாடு செய்தது.

'இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்களின்' பணிகளை, குறிப்பாக, அமெரிக்க நீதித் துறைக்கும், பிரித்தானிய நாடாளு மன்றத்திற்கும் நாங்கள் அளித்த இனப்படுகொலை அறிக்கை குறித்தும், தமிழர்களைப் படுகொலை செய்வதைக் காட்டிய 'சானல் 4' ஒளிப்படத்தின் மீதான எங்களின் தடயவியல் ஆய்வறிக்கையும் (இதைப் பின்னர் போர்க் குற்றங்களுக்கான அய்.நா.வின் சிறப்பு அறிக்கையாளரான பிலிப் ஆல்ட்ஸன் மேற்கோளிட்டார்) புதுக் குடியிருப்பு மருத்துவமனை மீது நடந்த குண்டு வீச்சுத் தாக்குதலை உறுதிப்படுத்திய செயற்கைக்கோள் படங்கள் மீதான எங்களின் ஆய்வையும் பற்றி அறிந்திருந்த நேரடிச் சாட்சிகளும், மனித உரிமை செயல்பாட்டாளர்களும் 'இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள்' அமைப்பினை, இந்த தீர்ப்பாயத்தின் விசாரணையில் பங்கேற்கும்படி அழைப்பு விடுத்தனர்.

கடந்த 60 ஆண்டு காலமாகத் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் வேதனைகளை முடிவுக்குக் கொண்டு வரும் நீளமான நடைபாதையின் முதல் கல்லாகவே – டப்ளின் தீர்ப்பாயத்தை 'இனப் படுகொலைக்கு எதிரான தமிழர்கள்' அமைப்பு பார்க்கிறது.

கடந்த சில ஆண்டுகளில், தனது கண்மூடித்தனமான குண்டு வீச்சுகள், வான் தாக்குதல்கள், உணவு மற்றும் மருந்து தடை, கூட்டுத் தடுப்புக் காவல், பாலியல் வன்கொடுமை, தமிழ்ப் பெண்கள் மீது கும்பல் வன்புணர்வு நடத்தும் நடைமுறை, மருத்துவமனைகள் மீதான குண்டுவீச்சுகள், பள்ளிகள், கோயில்கள், தேவாலயங்கள் ஆகியவற்றை அழிப்பது, தமிழ்ப் போராளிகள் மற்றும் போராளி

அல்லாதவர்கள் ஆகியோரைக் கால வரையறை இன்றித் தன்னிச்சையாகத் தடுத்து வைக்கும் கொள்கை, நாகரிகமடைந்த நாடுகள் அங்கீகரித்துள்ள அடிப்படை சுதந்திரத்திற்கு மறுப்பு போன்றவற்றின் மூலம் – சிங்கள பவுத்த அரசு தமிழர்களின் இருப்பையே முற்றிலுமாக அழித்துள்ளது.

தீர்ப்பாயத்தின் தீர்ப்பை 'இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள்' வரவேற்கிறது. இந்த கொடூரமான குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள், தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்கள், தங்கள் உடலின் பகுதிகளை இழந்தவர்கள், தீவெங்கும் ரகசிய இருப்பிடங்களில் அடைத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் ஆகிய அனைவருக்கும் – நீதி வழங்கும் வழியைத் தேடவும் அதற்கான சூழலை தகவமைக்கவும் 'இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள்' தொடர்ந்து போராடும்.

*இலங்கை அரசு மீதான போர்க் குற்றங்களை உலக நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கும், அதன் வழியாகத் தமிழர்களின் நலன்கள் காக்கப்படு வதற்குமான தங்களின் வருங்காலத் திட்டம் என்ன?*

தமிழ் மக்களை இனப்படுகொலையிலிருந்து காக்க வேண்டிய பொறுப்பில் 2009 இல் பெரும் தோல்வி ஏற்பட்டது. விடுதலைக்குப் பின்னான 60 ஆண்டு காலத்தில் சிங்கள பவுத்த அரசால் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட மிக மோசமான, பாரிய கொடூரக் குற்றங்களுக்குப் பின்னான வரலாற்றுத் தருணத்தில் நாம் நிற்கிறோம். உலகெங்கும் உள்ள புலம் பெயர்ந்த தமிழ் மக்களைச் சரியாக ஒருங்கிணைக்க முடியுமானால், தமிழர்கள் மீது இலங்கை அரசு நடத்தி வரும் வன்கொடுமைகள் மற்றும் அநீதியின் வரலாற்றிற்கு முற்றுப் புள்ளி வைக்கும் திறனும் ஆற்றலும் அவர்களுக்கு உண்டு.

பாதிப்புக்குள்ளான உலகத் தமிழ்ச் சமூகம், உண்மையும் நீதியும் கிடைக்கத் தகுதியுடையது. அது அவர்களின் மதிப்பை மீட்டெடுப்பதாகும். செப்டம்பர் 11–க்குப் பிறகான காலத்தில் டார்பர், சூடான் இனப்படுகொலைக்குப் பின் இரண்டாவது இனப்படு கொலையை புரிந்ததற்காக, ராஜபக்சே நிர்வாகத்தை பொறுப்பாக்கும் சட்டப்பூர்வமான முயற்சிகளுக்கு ஆதரவாகப் புலம் பெயர்ந்த தமிழ் மக்களை அணி திரட்டுவதில் 'இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள்' அமைப்பு கவனம் செலுத்தும்.

இலங்கை இராணுவத்தின் சில தாக்குதல்கள், புரட்சிக்கு எதிரான போரில் சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்ட எல்லைக்குள் இருந்தன என்பதை 'இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள்' அமைப்பு ஒப்புக் கொண்டாலும், பொதுவான நிலையில், புரட்சிக்கு எதிரான பாதுகாப்பு மாதிரிகள் வழக்கமான பன்னாட்டு மானுடச் சட்டங்களின் வரையறைக்குள் இருக்க வேண்டும். அதன்படி, நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான தமிழர்களை விலங்குகள் போல 3 பாதுகாப்பு வலையங்களுக்கு ஓட்டிச் சென்று, அவர்கள் மீது குண்டு வீசிக் கொல்வதும், மருந்துகள் அளிக்க மறுப்பதும், பின்னர் அதிலும் தப்பியவர்களை மீண்டும் முள் வேலி போடப்பட்ட போர் முகாம்களுக்குள் ஓட்டிச் சென்று அடைப்பதும், நிச்சயமாக மனிதாபிமானத்தின் அடிப்படையிலும் சட்டப்படியும் நியாயப்படுத்தவே முடியாதது.



மனித உரிமைகள் மற்றும் மனித நேய உரிமைகள் அமைப்புகள் மற்றும் செயற்பாட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றுவது மற்றும் அய்.நா.வின் பாகுபாடான அணுகுமுறை மேலாக வும் இலங்கை அரசு கீழாகவும் உள்ளதற்கு இடைப்பட்ட வெளியில் பணியாற்றுவது ஆகிய நிலைகளில் நின்று, ராஜபக்சே நிர்வாகம் மற்றும் இலங்கை அரசுக்கு எதிரான போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை வாதங்களைத் திட்டமிட்டுக் கட்டியெழுப்புவதில் 'இனப்படு கொலைக்கு எதிரான தமிழர்கள்' அமைப்பு தொடர்ந்து பணியாற்றும்.

வன்னியில் என்ன நடந் தது என்பதையும், அங்கு நடந்த சாவுகளும் துயரங்களும், வரலாற்றில் இதற்கு முன் நடந்த இனப்படு கொலைகளான நாஜி ஜெர்மனி, கம்போடியா, ருவாண்டா, ஸ்ரெப்ரெனிகா மற்றும் டார்பர் ஆகியவற்றிற்கு இணையானவை என்பதையும் – வருங் காலத் தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் – உலக மற்றும் தமிழ் வரலாற்றினைத் தமிழ் மக்கள் எழுதித் தங்களுக்கு நியாயம் செய்ய வேண்டும்.

தற்பொழுது விடுதலைப் புலிகளுக்குப் பின்னானதாக இருக்கும் இலங்கையில், இனப்படுகொலை மற்றும் திட்டமிட்ட மனித உரிமை மீறல்கள் இல்லை என்ற அளவிற்கும் மேலான ஒரு நிலையைத் தருவதாகவும், உறுதி அளிப்பதாகவும் இருக்க வேண்டும். தற் பொழுது சிறையிலோ, முகாமிலோ உள்ள அல்லது கொலை செய்யப்பட்ட அல்லது துன்புறுத்தலுக்குள்ளான போராளிகள் மற்றும் போராளிகள் அல்லாதவர்கள் ஆகியோருக்கும் உரிமைகள் உண்டு. அவர்களுக்கு அந்த உரிமைகள் மறுக்கப்பட்டதான அனைத்து வழக்குகளையும் வெளிக் கொணர்வதற்கான வழிகளை 'இனப்படு கொலைக்கு எதிரான தமிழர்கள்' அமைப்பு தொடர்ந்து ஆராயும்.

www.tamilarangam.net

## பன்னாட்டுச் சட்டங்களின்படி

# ஈழத் தமிழர்களின் உரிமைகள்

■ *பிரான்சிஸ் பாய்ல்*

இரண்டு அடிப்படைக் கருத்துகளை நான் முன் வைக்க விரும்பு கிறேன் :

முதலாவதாக, இலங்கையில் வாழும் தமிழர்கள் இனப்படு கொலைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இரண்டாவதாக, பன்னாட்டுச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளின்படி, தாங்கள் விரும்பினால் ஒரு தனியான அரசை நிறுவும் உரிமை உள்ளிட்ட சுயநிர்ணய உரிமை – இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு உண்டு. அத்துடன், இலங்கையில் வாழும் தமிழர்கள் இனப்படுகொலைக்கு பலியாகிறார்கள் என்ற உண்மையானது, அவர்கள் விரும்பினால் ஒரு தனியான அரசை நிறுவுவது உள்ளிட்ட அவர்களின் சுயநிர்ணய உரிமைக்கு வலுசேர்க்கவும் ஆதரிக்கவும் செய்கிறது.

1948 இனப்படுகொலை ஒப்பந்தத்தின் பிரிவு 1, அதில் கையெழுத்திட்டுள்ள 140 அரசுகளையும், தமிழர்கள் மீது இலங்கை அரசு நடத்தும் இனப்படுகொலையை 'தடுத்து நிறுத்த' உடனடியாகச் செயல்பட கோருகிறது. இனப்படுகொலை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள 140 அரசுகளும், பிரிவு 1 க்கு தங்களின் கடப்பாட்டினை நிறைவேற்ற வேண் டிய முக்கிய நடவடிக்கைகளில் முதன்மையானது என்ன வெனில், **1948 இனப் படுகொலை ஒப்பந்தத்தை மீறியதற்காக உலக நீதிமன்றம் என்று அழைக்கப்படும் ஹேக் பன்னாட்டு நீதி மன்றத்தில், இலங்கை அரசு மீது வழக்குத் தொடுத்து விசாரிக்க வேண்டும். இதற்கு அடிப்படையாக இருக்கும் பிரிவு 9 பின் வருமாறு கூறுகிறது :**

''ஓர் இனப்படுகொலைக்கோ, பிரிவு 3 இல் பட்டியலிடப்பட்டுள்ள பிற செயல்களுக்கோ ஓர் அரசு பொறுப்பாவது குறித்தது உட்பட, இந்த ஒப்பந்தத்தைப் புரிந்து கொள்வதிலோ, நடைமுறைப் படுத்துவதிலோ, நிறைவேற்றுவதிலோ – ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டுள்ளவர்களுக்கு இடையிலான முரண்பாடுகள், அதில் தொடர்புடைய ஏதாவது ஒரு பிரிவினரின் வேண்டுகோளின் படி, பன்னாட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும்.''

இனப்படுகொலை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள 140 அரசுகளில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேலானது – 1. உடனடியாக இலங்கை மீது ஹேக் பன்னாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும் 2. உலக நீதிமன்றம் அவசர விசாரணை நடத்த கோர வேண்டும் 3. வன்னியில் உள்ள 3 லட்சம் தமிழர்களுக்கு எதிராக இலங்கை புரியக்கூடிய அனைத்து இனப்படுகொலை செயல்களைத் தடுக்கவும், நிறுத்தவும், அதற்கு எதிராக அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் – ஓர் ஆணையை பிறப்பிக்க வேண்டுகோள் விடுக்க வேண்டும். அப்படி வழங்கப்படும் உலக நீதிமன்றத்தின் ஆணையானது, உள்ளூரில் வழங்கப்படும் இடைக்கால எச்சரிக்கை ஆணை அல்லது நிரந்தரத் தடை ஆணைக்குச் சமமான உலகளாவிய உத்தரவாகும்.

உலக நீதிமன்ற ம் அப்படியான ஆணையைப் பிறப்பித்த உடன் அது அய்.நா. சார்ட்டர் பிரிவு 94(2)இன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட வேண்டி அய்.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு உடனடியாக அறிவிக்கப்படும். 1. வன்னியில் நிலவும் சூழல் 'அமைதிக்கு அச்சுறுத்தல்' ஏற்படுத்தக் கூடியதாக இருப்பதால், அய்.நா. சார்ட்டர் பிரிவு 39இன் படி, அய். நா. பாதுகாப்பு அவையின் தலையீடு அவசியமாகிறது என்ற உண்மை 2. தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையை நிறுத்த வேண்டிய கடப்பாடு, இனப்படு கொலை ஒப்பந்தத்தின் பிரிவு 1இன்படி அவர்கள் அனைவருக்கும் இருக்கிறது என்ற உண்மை ஆகியவற்றைப் புறந்தள்ளி, இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தி வரும் இனப்படுகொலையைத் தடுப்பதற்கான எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள, அய்.நா. பாதுகாப்பு அவை உறுப்பினர்கள் தவறியும் மறுத்தும் விட்டனர்.

உலக நீதிமன்றத்தின் ஆணையானது, இதை அய்.நா. பாதுகாப்பு அவையின் செயல் திட்டத்தில் இணைக்கும்; அதன் மூலம் இலங்

www.tamilarangam.net

கையில் தமிழர்களுக்கு எதிராக நடந்து கொண்டிருக்கும் இனப் படுகொலையை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அய்.நா. பாதுகாப்பு அவை மேற்கொள்ள அது வலியுறுத்தும். இனப்படு கொலை ஒப்பந்தமானது, இனப்படுகொலை குற்றம் என்பதற்கான விளக்கமாக கீழ்க்காண்பவற்றை கூறுகிறது :

தற்போதைய ஒப்பந்தத்தின்படி, இனப்படுகொலை என்பது முழுமையாகவோ, பகுதியாகவோ ஒரு தேசிய, இன, மரபின அல்லது மதக் குழுவை அழிப்பதற்கான நோக்கத்துடன் கீழ்க் காணும் செயல்களை செய்தல் :

1. குழுவின் உறுப்பினர்களை கொல்லுதல் 2. குழுவின் உறுப்பினர்களுக்கு உடல் அல்லது உளவியல் ரீதியாக கடுமையான தீங்கை ஏற்படுத்துதல் 3. அக்குழுவானது முழுமையாகவோ, பகுதியாகவோ அழிவதற்கான வாழ்வியல் நிலைகளை அக் குழுவின் மீது திட்டமிட்டுத் திணித்தல்.

சட்டப்படி முன்பு 'சிலோன்' என்று அழைக்கப்பட்ட சிங்கள – பவுத்த இலங்கையானது, இந்து – கிறித்துவ தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலையை நடத்தியுள்ளது. இந்த இனப்படு கொலையானது 1948இல் தொடங்கி, இன்று வரை விரைவாக நடத்தப்பட்டு, தற்போது வன்னியில் உச்சத்தை அடைந்து வருகிறது. இது, இனப்படுகொலை ஒப்பந்தத்தின் பிரிவுகள் 2(அ), (ஆ), (இ) ஆகியவற்றை மீறுவதாகும்.

கடந்த 60 ஆண்டுகளாக சிங்கள – பவுத்த சிலோன்–இலங்கை, வேறு தேசிய, இன, மரபின, மதக்குழுவான இந்து – கிறித்துவ தமிழர்களில் பெரும் பகுதியினரை அழிக்க – திட்டமிட்ட, பரவலான, முழுமையான இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. இந்த சிங்கள – பவுத்த சிலோன் – இலங்கையின் நடவடிக்கைகளானது, இந்து – கிறித்துவ தமிழர்களுக்குக் கொடிய உடல் மற்றும் உளவியல் ரீதியான தீங்கை ஏற்படுத்தியுள்ளது. இது, இனப்படுகொலை ஒப்பந்தம் பிரிவு 2(அ)விற்கு எதிரானது. இந்த சிங்கள – பவுத்த சிலோன் – இலங்கையின் நடவடிக்கைகளானது, இந்து – கிறித்துவ தமிழர்கள் முழுமையாகவே, பகுதியாகவோ அழிவதற்கான வாழ்வியல் நிலைகளை அக்குழுவின் மீது திட்டமிட்டுத் திணித்துள்ளது. இது, இனப்படுகொலை ஒப்பந்தம் பிரிவு 2(இ)க்கு எதிரானது.

1983 முதல் சிங்கள – பவுத்த இலங்கையானது, ஏறத்தாழ ஒரு இலட்சம் இந்து – கிறித்துவத் தமிழர்களைக் கொன்றுள்ளது. இந்த



இனப்படுகொலைப் பட்டியலில் தற்பொழுது வன்னியின் மேலும் மூன்று இலட்சம் இந்து – கிறித்துவ தமிழர்களை சேர்த்துள்ளது. வன்னியில் உள்ளமூன்று இலட்சம் தமிழர்கள் மேலும் இனப்படு கொலைக்கு ஆளாகாத வண்ணம் அவர்களைக் காப்பாற்ற, இனப் படுகொலை ஒப்பந்தத்தின் பிரிவு 1க்கு தங்களின் கடப்பாட்டினை நிறைவேற்ற – ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகளில் ஒரு நாடு, இலங்கை மீது உலக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும். அதுவே தற்போதைய உடனடித் தேவையாக இருக்கிறது.

இலங்கையில் வாழும் ஒரு குழுவினர் என்ற அடிப்படையில் தமிழர்களை நோக்கும்போது, நான் முன் வைக்க விரும்பும் இரண்டாவது கருத்து என்னவெனில் – பன்னாட்டுச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளின் அடிப்படையில் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. இங்கு இலங்கை அரசு கையெழுத்திட்டுள்ள ஒரு பன்னாட்டு ஒப்பந்தத்திலிருந்து நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன். அதன் மூலம் **இலங்கைத் தீவில் வாழும் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை வெளிப்படையாக அங்கீகரிக்க விரும்புகிறேன். அது, சமூக மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பன்னாட்டு ஒப்பந்தம். இதில் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின் பிரிவு – 1இன் படி, 'அனைத்து மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு' என்பதற்கு அவர்கள் கட்டுண்டு இருக்கிறார்கள்.**

அதோடு தெளிவாக, இலங்கைத் தீவில் வாழும் தமிழர்கள் 'மனிதர்களே'. இலங்கைத் தமிழர்கள் இலங்கை அரசிலிருந்து மாறுபட்ட தங்களுக்கென தனியான மொழி, மரபினம், இனத் தன்மை மற்றும் மதங்களை கொண்டுள்ளனர். தமிழர்கள் தங்களை தனியான 'மக்களாகவே' பார்க்கிறார்கள். இலங்கை அரசும் அவ்வாறே பார்க்கிறது. இந்தக் குறிப்பிட்ட காரணத்துக்காகவே இலங்கை அரசு – தமிழர்களை ஒட்டுமொத்தமாக அழிக்கவும், அவர்களின் தாய்நிலத்தை இனச் சுத்திகரிப்பு செய்யவுமான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதனால் இதைவிட வேறு சான்று தேவையில்லை. பன்னாட்டுச் சட்டங்கள் மற்றும் நடை முறைகளின்படி, சுயநிர்ணய உரிமை உள்ள மக்களுக்கான அக மற்றும் புற அடிப்படைகள் அனைத்தும் இலங்கையில் வாழும் தமிழர்களுக்குப் பொருந்துகின்றன.

இலங்கை அரசும் கையெழுத்திட்டுள்ள இந்தப் பன்னாட்டு ஒப் பந்தம் அங்கீகரித்துள்ள பன்னாட்டுச் சட்டங்களின் கீழ்,

www.tamilarangam.net

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு உள்ள மேலும் சில அடிப் படை சுயநிர்ணய உரிமைகளை தொடர்ந்து பட்டியலிடுகிறேன்.

''அந்த உரிமையின் அடிப்படையில் தங்களது அரசியல் நிலையை முடிவு செய்ய அவர்களுக்கு அதிகாரம் உண்டு. தங்களின் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு வளர்ச்சியை முன்னெடுக்க அவர்களுக்கு அதிகாரம் உண்டு.''

இந்த உரிமைகள் இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு இன்றும் உள்ளது. இது, இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்டதாகவும் உள்ளது. இவை குழு உரிமைகள், தனியான உரிமைகள் மட்டுமல்ல. இவை குழு உரிமைகள் என்ற அடிப்படையில் பாதுகாக்கப்பட வேண்டியவை. ஏனெனில் இலங்கை, தமிழர்களை ஒரு குழுவினர் என்ற அடிப்படையிலேயே தாக்கியது; தனி நபர்களாக அல்ல. ஆக, தமிழர்கள் ஒரு குழுவினராக பாதிக்கப்பட்டுள்ளதால், அவர்கள் ஒரு குழுவினராக பாதுகாக்கப்பட வேண்டும். அதிலும் தமிழர்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய அனைத்து அடிப்படை உரிமைகளிலும் முதன்மையானது சுயநிர்ணய உரிமையே. இது, அவர்களது அரசியல் நிலையை அவர்கள் நிர்ணயித்துக் கொள்வது மற்றும் அவர்களின் சொந்தப் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு வளர்ச்சியை முன்னெடுப்பது. அத்துடன் தங்கள் குறிக் கோள்களை அடைவதற்கு இதுதான் சரியானது என்று தமிழர்கள் முடிவெடுப்பார்களேயானால், அதன்படி தங்களுக்கென தனியான ஓர் அரசை நிறுவுவது ஆகியவற்றை உள்ளடக்கும்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமை குறித்த மற்றொரு பகுதியானது, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பன்னாட்டு ஒப்பந்தத்தின் பிரிவு 1 இன் இரண்டாம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒப் பந்தத்தில் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளது. இதில் நீங்கள் கவனிக்க வேண்டியது என்னவெனில், இனப்படுகொலை ஒப்பந்தம் உட்பட இலங்கை அரசும் கையெழுத்திட்டுள்ள ஒப்பந்தங்களையே நான் பயன்படுத்துகிறேன்.

இலங்கை அரசு அங்கீகரிக்க மறுத்து, இலங்கையில் வாழும் தமிழர்களைப் பொருத்தவரையில், மிக மோசமாக மீறியுள்ள பன்னாட்டுச் சட்டங்களின் எந்தப் பிரிவையும் நான் குறிப்பிடவில்லை. ''அனைத்து மக்களும், தங்கள் சொந்த தேவைகளுக்கு, இயற்கை வளங்களை, பரஸ்பர நலன்களின் அடிப்படையிலும் பன்னாட்டுச் சட்டங்களின் அடிப்படையிலும், பன்னாட்டு பொருளாதார ஒத்துழைப்பினால் எழும் கடப்பாடுகளின் மீதான முன் தீர்மானங்கள் எதுவுமின்றி பயன்படுத்தும் உரிமை கொண்டவர்கள், தங்கள் சொந்த வளங்களைப் பயன்படுத்தி வாழ்வதற்கான உரிமைகளை மக்களிடமிருந்து எந்தச் சூழலிலும் பறிக்கக் கூடாது.''



இருப்பினும் இலங்கை அரசு, தமிழ் மக்கள் தங்களது சொந்த வளங்களைப் பயன்படுத்தி வாழ்வதற்கான உரிமைகளை, தன்னால் ஆன அளவிற்கு மறுத்திருக்கிறது என்ற உண்மையை நாம் அறிவோம். அதுதான் இனப்படுகொலை என்ற அளவிற்கு இன்று வந்து நின்றுள்ளது. இது நான் முன்னர் குறிப்பிட்டதைப் போல, ஒரு குழுவினரை முழுவதுமாகவோ, பகுதியாகவோ அழிக்கும் நோக்கில் – அவர்கள் மீது ஒரு வாழ்நிலை திணிக்கப்படுவதை தடுக்கக் கூடிய இனப்படுகொலை ஒப்பந்தத்தை மீறுவதாகும். இந்த பொருளாதார உரிமைகளும் அரசியல் உரிமைகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை என்பதைக் கவனிக்க வேண்டும். சுய நிர்ணய உரிமையின் இந்த இரு கூறுகளும் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும். ஏனெனில், தமிழர்கள் இனப்படுகொலைக்குப் பலியானவர்கள். அவர்கள் தங்கள் இயற்கை வளங்களை சுதந்திரமாகப் பயன்படுத்த, அவர்களின் அரசியல் உரிமைகள் மற்றும் பொருளாதார உரிமைகளை நாம் பாதுகாக்க வேண்டும்.

தமிழ் மக்களே இலங்கை அரசாங்கம் அல்ல. தீவின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தங்களின் மரபு ரீதியான தாய் நிலத்தின் மீது, தங்கள் வயல்வெளிகள், தங்கள் சுரங்கங்கள், தங்கள் பயிர்கள், தங்கள் காடுகள், தங்கள் நீர் வளங்கள், தங்கள் கடற்கரைகள் மற்றும் பிறவற்றின் மீது அதிகாரம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இது முக்கியமானது. இன்று நாம் அறிவோம்... இலங்கை அரசு, தமிழர்களின் மரபு ரீதியான தாய்நிலமான இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் மீது தமிழர்கள் கொண்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகள் அனைத்தையும் திருடி, அழித்து இல்லாமல் செய்யும் வேலையில் ஈடுபட்டுள்ளது. இலங்கை அரசு அங்கு வாழும் தமிழர்கள் மீது இனச் சுத்திகரிப்பை மேற் கொண்டுள்ளது.

இலங்கையில் வாழும் தமிழர்கள் இலங்கை அரசு ஏற்றுக் கொண்ட ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே, சுயநிர்ணய உரிமை கொண்டவர்கள் என்பதை நான் முன்பே நிறுவிவிட்டேன். அவர்க ளின் சுயநிர்ணய உரிமையின் காரணமாக எழும் பிற அரசியல் விளைவுகள் என்ன? அய்.நா.வின் சார்டர் (1971) உடன் உடன்

www.tamilarangam.net

பாடு கொண்ட 'அரசுகளுக்கு இடையிலான நட்பு ரீதியான உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்த பன்னாட்டுச் சட்டத்தின்' கோட்பாடு கள் மீதான அறிவிக்கை என்று அழைக்கப்படுவதில் அவை முன் வைக்கப்பட்டுள்ளன. இலங்கை அரசு இந்த அறிவிக்கையை அய்.நா. வின் பொது அவையில் ஏற்றுக் கொண்டுள்ளது. அதனால் நான் இங்கு இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளாத எந்தச் சட்டப்பிரிவையும் குறிப் பிடவில்லை. அந்த அறிவிக்கையின்படி, தமிழ் மக்களுக்கு உள்ள அர சியல் மாற்றுத் திட்டங்கள் என்ன என்பதை குறிப்பிடுகிறேன்.

1. ஓர் இறைமையுள்ள சுதந்திர அரசை நிறுவுவது 2. ஒரு சுதந்திர அரசுடன் சுதந்திரமாக இணைவது 3. மக்கள் சுதந்திரமாக முடிவு எடுத்திருக்கும் எந்த ஓர் அரசியல் நிலையையும் உருவாக்குவது. இவையே அந்த மக்கள் தங்களின் சுயநிர்ணய உரிமையை நடை முறைப்படுத்துவதற்கான வழிகள்.

எனவே, மீண்டும் இங்கு ஓர் இறுதி அரசியல் தீர்வு என்னவாக இருக்க வேண்டும் என்பதை இலங்கை அரசு முடிவு செய்ய முடியாது. இலங்கையில் வாழும் தமிழர்களே மேற் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வழிகளில் எது தங்களுக்கு விருப்பமானது என்பதை முடிவு செய்ய வேண்டும். அதோடு, இந்த மூன்றில் எந்த வழியை இலங்கையில் வாழும் தமிழர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை நான் சொல்வதற்கில்லை என்பதையும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அதோடு, இந்தியாவில் வாழும் தமிழர்களும், இலங்கையில் வாழும் தமிழர்களும் இந்த மூன்றில் எந்த வழியை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதைச் சொல்வதற்கில்லை. பன்னாட்டுச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளின்படி, தங்களின் சுயநிர்ணய உரிமையை எப்படி நிலைநாட்டுவது என்பதை அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

ஆனாலும், **வரலாற்று நோக்கில் நான் குறிப்பிட விரும்புவது என்னவெனில், இலங்கையில் வாழும் தமிழர் களைப் போல இனப்படுகொலைக்கு ஆளான மக்கள், தாங்கள் மேலும் அழிவதிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரே வழி–தங்களுக்கென ஒரு சுதந்திர அரசை நிறுவுவதே.** உண்மையில், உலகம் பார்த்துக் கொண்டிருக்க, இலங்கை அரசானது, வேண்டுமென்றே, வெளிப்படையாக, வெட்கமின்றி எந்த அடிப்படைக் காரணமுமின்றி 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்களை வன்னியில் படுகொலை செய்தது. ஆனால் ஒட்டு மொத்த உலகத்திலும் ஒரு நாடு கூட அவர்களைப் பாதுகாக்கவோ, அவர்களுக்காக வாதாடவோ, 1948இன் இனப்படுகொலை



ஒப்பந்தத்தின் பிரிவு 1இன்படி அவர்களுக்கு உதவவோ முன் வரவில்லை. இதனாலேயே இலங்கை அரசு, மேலும் தங்களை அழித்தொழிப்பதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அவர்களுக்கென தனியான ஒரு சுதந்திர அரசை நிறுவுவது அவசியமாகிறது. இனப்படுகொலைக்கு ஆளான மக்களுக்குச் சிறந்த தீர்வாகவும், சரியான ஈடாகவும் இருக்கக்கூடியது, அவர்களுக்கென ஒரு தனியான சுதந்திர அரசே எனப் பன்னாட்டுச் சட்டங்களும் நடைமுறைகளும் நிறுவுகின்றன.

இந்திய அரசானது, இலங்கையில் வாழும் தமிழர்களின் சுய நிர்ணய உரிமை மற்றும் சுதந்திர அரசை நிறுவுவதற்கான உரிமையை தான் அங்கீகரித்தால், தமிழ்நாட்டில் வாழும் 6 கோடி தமிழர்களும் அதே உரிமையைக் கோரி, இந்தியாவிலிருந்து பிரிந்து போவதற்கான போராட்டத்தை முன்னெடுப்பார்கள் எனத் தொடர்ந்து வாதம் செய்கிறது.

இதைப் பொருத்த வரையில், அரசுகளுக்கு இடையிலான நட்பு ரீதியான உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்த பன்னாட்டுச் சட்டத்தின் கோட்பாடுகள் மீதான அறிவிக்கைக்கு நான் மீண்டும் செல்கிறேன். இதை இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரண்டு அரசுகளுமே ஏற்றுக் கொண்டுள்ளன. 1986 இன் நிகரகுவா வழக்கில் பன்னாட்டு நீதிமன்றம் முடிவு செய்ததன்படி, அய்.நா. சார்டரின் நிபந்தனைகளை விளக்குவதான வழக்கமான பன்னாட்டுச் சட்டங்கள் குறித்த வரைமுறைகளை முன்வைக்கிறது. குறிப்பாக, கீழ்க்காணும் வரிகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்: ''அடுத்து வரக்கூடிய பத்திகளில் உள்ள எவையும், தனது எல்லைக்குள் வாழும் அனைத்து மக்களையும், இன, மத அல்லது நிற அடிப்படையில் எந்தப் பாகுபாடுமின்றி நடத்தக்கூடிய அரசைப் பெற்றுள்ள, அதன் மூலம் சம உரிமை மற்றும் மக்களின் சுயநிர்ணய உரிமைகள் மற்றும் கோட்பாடுகளை கடைப்பிடிக்கக் கூடிய இறைமையுள்ள சுதந்திரமான, எந்த அரசின் எல்லை பாதுகாப்பையோ, அரசியல் ஒருங்கிணைவையோ – முழுமையாகவோ பகுதியாகவோ – பாதிப்பதாகவோ, சிதைப்பதாகவோவான எந்த செயல்களையும் அங்கீகரிப்பதாகவோ, ஊக்கப்படுத்துவதாகவோ எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.''

அறிவிக்கையின் இந்தப் பத்தி, தங்களின் சுயநிர்ணய உரிமையை நடைமுறைப்படுத்துவதன் அடிப்படையில், ஒரு மக்கள் வேறொரு அரசிடமிருந்து பிரிந்து போகும் உரிமைக்கான வழக்கமான பன்னாட்டுச்

www.tamilarangam.net

சட்டத்திற்கான வரையறைகளை வகுக்கிறது. மேற்குறிப்பிட்டுள்ள சொற்களின்படி, ஓர் அரசு ''சம உரிமை மற்றும் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடுகளுக்கு'' ஏற்ப நடந்து கொள்ளாத போது அதனால், ''இன, மத மற்றும் நிற வேறுபாடின்றி தனது எல்லைக்குள் வாழும் அனைத்து மக்களையும்'' அது பிரதிநிதித்துவப்படுத்தாத போது மட்டுமே பிரிந்து போவது என்பது அனுமதிக்கப்படும்.

தமிழர்களைப் பொருத்தவரையில், சிலோன்–இலங்கை அரசு, தான் அமைக்கப்பட்ட 1948 ஆண்டு முதலே ஒருபோதும் ''சம உரிமைகள் மற்றும் மக்களின் சுயநிர்ணய உரிமைகள் கோட்பாடுகளுக்கு ஏற்ப'' நடந்து கொண்டதே இல்லை. மேலும், தமிழர்களைப் பொருத்த அளவில் சிலோன் – இலங்கை அரசு, ''இன, மத மற்றும் நிற வேறுபாடின்றி தனது எல்லைக்குள் வாழும் அனைத்து மக்களையும்'' அது பிரதிநிதித்துவப்படுத்தியதே இல்லை.

உண்மையில், சிலோன்–இலங்கை அரசு, எப்போதும் தமிழர்களை இன, மத, நிற மற்றும் மொழி அடிப்படையில் பாகுபடுத்தி, மோசமாக நடத்தி வந்திருக்கிறது. சிங்களர்களின் இந்தப் பரவலான குற்றச் செயல்கள், தற்பொழுது தமிழர்கள் மீது இலங்கை அரசு நடத்திய ஒட்டுமொத்தமான இனப்படுகொலைச் செயல்களில் வந்து முடிந்திருக்கிறது. ஆகவே, பன்னாட்டுச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளின்படி, குறிப்பாக இந்த அறிவிக்கையின்படி, தமிழர்கள் இலங்கையிலிருந்து பிரிந்து போக உரிமை உடையவர்கள்.

மாறாக, இந்திய அரசு தமிழ் நாட்டில் வாழும் தமிழர்களைப் பொருத்தவரையில், ''சம உரிமை கள் மற்றும் மக்களின் சுயநிர்ணய உரிமைகள் கோட்பாடுகளுக்கு ஏற்ப'' நடந்து கொண்டு, அதன் மூலம் ''இன, மத மற்றும் நிற வேறுபாடின்றி, தனது எல்லைக்குள் வாழும் அனைத்து மக்களையும்'' பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய ஓர் அரசை கொண்டிருக்கிறது.

இந்தியாவில் அண்மையில்தான் தமிழ்நாட்டில் வாழும் தமிழர்கள், பிறரைப் போலவே முழுமையான சமத்துவத்தின் அடிப்படையில் பங்கேற்ற ஒரு தேர்தல் நடைபெற்றது. இந்தியாவில் உள்ள தமிழர்கள் இந்தியாவில் வாழும் பிற மக்களைப் போன்ற முழுமையான சட்ட ரீதியான சமத்துவத்தைக்



கொண்டுள்ளனர். உண்மையில் தங்களுக்கெனத் தமிழ்நாட்டில் ஓர் அரசையும் கொண்டுள்ளனர்.

எனவே, எனது கருத்தின்படி, தமிழ்நாட்டில் வாழும் ஆறு கோடி தமிழர்கள், இந்தப் பிரச்சனை குறித்து வழக்கமான பன்னாட்டுச் சட்டத்திற்கான அடிப்படை நெறிமுறைகள் வகுக்கும் இந்த அறிவிக்கையின்படி, பன்னாட்டுச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளின் கீழ் பிரிந்து போகும் உரிமை உடையவர்கள் அல்லர்.

மாறாக, இந்தியாவும் இலங்கையும் வாக்களித்துள்ள இந்த அறிவிக்கை உள்ளிட்ட பன்னாட்டுச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளின்படி, இலங்கையில் வாழும் தமிழர்களுக்குப் பிரிந்து போகும் உரிமை உண்டு. எனவே, இந்திய அரசின் நிலைக்கு உரிய அனைத்து மரியாதைகளுடனும், இலங்கையில் வாழும் தமிழர்கள் சுதந்திர அரசை நிறுவுவதன் மூலம் அவர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதானது, அதே போன்ற ஒன்றைத் தமிழ் நாட்டில் உள்ள தமிழர்களுக்கும் ஏற்படுத்திவிடும் என்ற வாதம் ஒரு பொய்யான கருத்து என்று கூறுகிறேன். இத்தகைய முடிவுக்குப் பன்னாட்டுச் சட்டங்களில் எந்த அடிப்படையும் இல்லை.

சொல்லப் போனால், இலங்கைத் தீவில் வாழும் தமிழர்கள் தங்களுக்கென ஒரு சுதந்திர அரசை நிறுவுவது உட்பட, அவர்களின் சுயநிர்ணய உரிமையை இந்திய அரசு அங்கீகரிக்குமானால், இந்த அறிவிக்கை உள்ளிட்ட பன்னாட்டுச் சட்டங்கள், இந்தியாவின் எல்லைப் பாதுகாப்பை முழுமையாக ஆதரிக்கும்.

ஒரு வேளை அதிகப்படியான எச்சரிக்கை உணர்வின் காரணமாக, இந்திய அரசு அந்த அளவிற்குத் தற்போது செல்ல விரும்பவில்லை எனில், அது இருப்பது போல் இருக்கட்டும். ஆனால் குறைந்தபட்சமாக, தமிழர்களின் உண்மையான தாய் நாடு என்ற அளவில், இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு ஒரு பாதுகாவலாக, பன்னாட்டுச் சட்டங்களின்படியான 'தாய்தேசமாக' இருப்பதற்கான அனைத்து உரிமை, கடப்பாடு, மற்றும் பன்னாட்டுச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளின்படியான நிலைப்பாடு ஆகியவை இந்தியாவுக்கு உண்டு.

அதனால் இந்திய, இலங்கை அரசு நடத்திய இனப்படு கொலைகளுக்காக அதன் மீது உடனடியாக, ஹேகில் உள்ள பன்னாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும். அவசர விசாரணையைக் கோர வேண்டும். இலங்கை அரசு, இலங்கையில்

www.tamilarangam.net

வாழும் தமிழர்களுக்கு எதிராகப் புரிந்து வரும் அனைத்து விதமான இனப்படுகொலைச் செயல்களையும் தடுத்து நிறுத்தக் கூடிய ஒரு தற்காலிகத் தடுப்பு ஆணையை உலக நீதிமன்றம் அளிக்க வேண்டும் எனக் கோர வேண்டும். சாவ், ஆஷ்விட்ஸ், கம்போடியா, சப்ரா மற்றும் ஷாடில்லா, ஸரெபிரெனிகா, ருவாண்டா, கொசோவோ, தற் பொழுது வன்னி ஆகியவற்றில் மரித்த உயிர்கள் – இதைவிடக் குறைச்சலாக எதையும் கேட்கவில்லை.

●